முத்து காமிக்ஸ்

# கதை சொல்லும் கொலைகள்!




முழு நீளக் க்ரைம் த்ரில்லர்!


நியூயார்க் நகரில் அன்றாடம் கொலைகள் நிகழ்வது பரபரப்பூட்டும் செய்தி இல்லைதான் என்ற போதிலும் சமீப நாட்களில் நடந்து வரும் தொடர் கொலைகளில் ஒரு விநோதம் இருந்தது.
கொலையுண்ட நபரின் சடலத்தின் மீது சிவப்பு நிற சாவி ஒன்றை விட்டுச் செல்வதை கொலைகாரன் வாடிக்கையாகக் கொண்டிருந்தான்.
ஜான் ஸ்டீல் சாகஸம்!
கதை சொல்லும் கொலைகள்!
வெஸ்ட் செஸ்டரின் புறநகர் பகுதியிலிருந்த கோல்ஃப் கிளப். இனிய பிற்பகல் வேளை. நடமாட்டமே இல்லாத சூழல். பிரபல புத்தக வெளியீட்டர்ளர் மார்க் ஹெப்ளர் தனியாக பயிற்சி செய்ய வேகமாக போய்க் கொண்டிருந்த வேளையில் கிளப் - ஹவுஸின் வராந்தாவில் கிளப் நிர்வாகி ஓர் உறுப்பினருடன் உரையாடிக் கொண்டிருந்தார்.
ஹெப்ளருக்கு கோல்ஃப் ஆட்டத்தில் ஏகப்பட்ட ஈடுபாடு. எவ்வளவு உற்சாகமாக விரைகிறார் பாருங்கள் மிஸ்டர் ஜோன்ஸ்.
தன்னோடு விளையாட அவர் என்னைக் கூப்பிட்டார். ஏற்கனவே நான் மிஸ்டர் டின் ஸ்ட்ராட்டனோடு ஒரு ரவுண்டு ஆட ஒப்புக் கொண்டுள்ளேன். அவர் எப்போதும் தாமதமாகத்தான் வருவார். இன்றைக்கும் அவருடைய வரவை எதிர்பார்த்துத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்.



இது நடந்து 40 நிமிடங்கள் கழித்துத்தான் ஸ்ட்ராட்டன் அங்கே வந்து சேர்ந்தார். கவர்னர் பதவிக்குப் போட்டியிடப் போகும் முன்னணி அரசியல்வாதி அவர். அவரும் ஜோன்ஸும் சேர்ந்து மைதானத்தில் இறங்கிய இருபதாவது நிமிடம் புதருக்குள்ளிருந்து கால்கள் வெளியே நீட்டிய நிலையில் கிடந்த சடலத்தைக் கண்ணுற்றனர்.
ஹே.... யாரது?
ஹெப்ளர்!
டீன் ஸ்ட்ராட்டன் திடசித்தமுள்ள ஒரு செயல்வீரர்.
கழுத்தில் ஒரு வயரால் சுருக்கிட்டுக் கொன்றிருக்கிறார்கள். ஜோ... நீதான் என்னைவிட வயதில் குறைந்தவன். வேகமாக கிளப் ஹவுஸுக்கு ஓடிப் போய் போலீஸுக்கு போன் பண்ணு. நான் இங்கே பிணத்தருகே இருக்கிறேன்.
ஓ.கே.
அடுத்த சில நிமிடங்களிலேயே லெப்டினெண்ட் டேவ் பர்னெட்டின் தலைமையில் புலனாய்வுக் குழு போலீஸ் தலைமையகத்திலிருந்து விரைந்தோடி வந்து சேர்ந்தது அங்கே...
எதற்கும் இன்னும் ஒன்றிரண்டு படங்கள் எடு எட்வர்ட்.
ஓ.கே.



பின்னர், கிளப் ஹவுஸில் டீன் படுவேகமாக வெடித்தார்.
நான் கவர்னர் ஆனதும் முதல் காரியமாக போலீஸ் டிபார்ட்மெண்டைத்தான் உலுக்கப் போகிறேன்... கொலைகளை அவர்கள் புலனாய்வு செய்யும் இலட்சணம் வெளியே சொன்னால் வெட்கக்கேடு.
இந்த சம்பவம் நிகழ்ந்து ஒருவாரம் கழித்து - 'திஸ் வேர்ல்ட்' வாரப் பத்திரிகையின் ஆசிரியர் ப்ரான்சிஸ் பார்க்மேன், வழக்கம் போல பின்னிரவு வேளையில் ஏகாந்தமாக அமர்ந்து பணிகளில் ஈடுபடும் நோக்கத்தோடு ஆபீஸுக்குத் திரும்பி வந்தார்.
நள்ளிரவுக்கு சற்று முன்னதாக அறைக் கதவு மெல்லிய ஓசையோடு திறந்து கொண்டது. சட்டென்று ஏறிட்டுப் பார்த்த பார்க்மேனுக்கு மரணபயம் பற்றிக் கொண்டது.
ஹே.. நீயா? உனக்கு என்ன வேண்டும்? ஓ நோ.. நோ..



சைலன்ஸர் பொருத்தப்பட்ட துப்பாக்கி தோட்டாவை உமிழ்ந்தது. அலறிக் கொண்டு மேஜை மீது சரிந்த பார்க்மேன் பிணமாகிப் போனார்.
டுப்!
ஆ ஆ ஆ!
மறுநாள் காலையில் பணிக்கு வந்த அவருடைய செகரட்டரி அவர் பிணமாகக் கிடப்பதையும், சடலத்தின் மீது சிவப்பு நிற சாவி ஒன்று வைக்கப்பட்டிருப்பதையும் கண்ணுற்று பீதியில் அலறினாள்.
ஐயோ...!
அன்று பிற்பகல் லெப்டினெண்ட் டேவ் பர்னட்டை தன் அறைக்கு வரவழைத்த அசிஸ்டெண்ட் கமிஷனர் ஹாகன் பயங்கரமாக டோஸ் விட்டார்.
பர்னட்... இந்த சிகப்பு சாவிக் கொலைகள் பற்றி நீ சீக்கிரமே உருப்படியான தகவல்கள் சேகரிக்கத் தவறினால் உன்னை
நான் என்ன செய்வேனோ எனக்கே தெரியாது. அப்புறம் நீ என்னை நோவதில் அர்த்தம் இராது.. சொல்லி விட்டேன்.


அதே நாளில் மாலைப் பொழுதில் ஒரு இன்ஷ்யூரன்ஸ் மோசடி சம்பந்தமாக விசாரித்துப் போக நியூயார்க் வந்திருந்த ஜான் ஸ்டீல் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போது, சற்றுத் தள்ளி நெடிய ஆகிருதியான உருவமுடைய நபர் கால் கட்டை விரலால் தரையில் கோலமிடுவது போல கோடுகள் இழுத்தவாறு தன்னை உற்றுநோக்குவதைக் கவனித்தார்.
என்னை ஏற்கனவே அறிந்தவன் போல் பார்க்கிறான். எனக்கும் கூட இந்த முகத்தை இதற்கு முன் பார்த்திருப்பதான ஞாபகம்.
அந்த நபர் தீர்மானத்தோடு அவரிடம் நெருங்கி வந்தான். முரட்டு புருவங்களுக்கிடையே பதுங்கிக் கிடந்த விழிகளில் தீட்சண்யமான பார்வை
ஒளிர்ந்தது. சுத்தமான ஆனால் கசங்கிய ஆடைகளை அணிந்திருந்தான். ஏனோ உற்சாகம் வடிந்து காணப்பட்டான்.
ஸார் நீங்கள் ஜான் ஸ்டீல் தானே? என் பெயர் வெர்னான். கிரைம் ரிப்போர்ட்டர் மற்றும் கிரைம் நாவல்கள் எழுதும் எழுத்தாளன்... பிரிட்டிஷ் புலனாய்வுப் போலீஸாருக்கு உதவி செய்வதோடு தனிப்பட்ட முறையிலும் டிடெக்டிவ் வேலையில் நீங்கள் ஈடுபட்டு வருகிறீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்.
உங்களுடைய கிரைம் நாவல்களை நிறைய வாசித்திருக்கிறேன்.
நானும் உங்களுடைய புகைப்படங்களை பார்த்திருக்கிறேன்.
வற்புறுத்தி பில்லுக்குரிய பணத்தை அவனே செலுத்தினான். பின்னர் அவரை ஓரமாக கிடந்த ஒரு மேஜைக்கு அழைத்துச் சென்று ஒரு கோரிக்கையை வெளியிட்டான்.
இந்த சிவப்பு சாவிக் கொலைகளை நீங்கள் ஏன் என்னோடு கூட்டு சேரக் கூடாது!


வாட்...! நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?
நான் க்ரைம் நாவல்கள் எழுதுவதோடு நிறைய குற்றங்களைப் புலனாய்வு செய்தும் வந்திருக்கிறேன். ஆனால் கடந்த இரண்டு வருடங்களாக பத்திரிகை ஆசிரியர்கள் என் எழுத்தில் த்ரில் இல்லை....
உயிர் இல்லை... நான் ஒரு காலிப் பெருங்காய டப்பா என்கிற கருத்தில் என்னைப் புறக்கணித்து வருகிறார்கள். என்னுடைய ஒத்துழைப்பை கோரிப் பெற்று வந்த போலீஸாரும் கூட இப்போது என்னை நாடுவதில்லை. வழக்குகளில் என் தலையீட்டை அவர்கள் இப்போது விரும்புவதில்லை.
ஒருவித வெறுப்பும் கோபமும் வெர்னானின் விழிகளில் மிளிர்ந்தன.
இளைய தலைமுறை எழுத்தாளர்களின் புத்தகங்களும் கதைகளும் அச்சில் வருகின்றன. அதிரடி சம்பவங்களின் விபரங்கள் அவர்களுக்கு மட்டுமே விநியோகிக்கப்படுகின்றன. எனக்கு இன்னமும் குற்றவியல் கும்பல்களோடு தொடர்பு இருந்து வருகிறது...
.... கற்பனை வளமும் வற்றிப் போய்விடவில்லை. இந்த 'சிவப்பு சாவி' தொடர் கொலைகள் பற்றி ஏற்கனவே நான் ஒரு மாதிரியாக யூகித்து வைத்திருக்கிறேன். ஆனால் என் யூகங்களைக் கேட்க போலீஸாருக்கு ஆர்வம் துளியும் கிடையாது. எனக்கு மட்டும் போதிய ஆதரவும், ஒத்துழைப்பும் கிடைத்தால் அந்தக் கொலைகளை துப்புத் துலக்க தேவையான ஆதாரங்களை நிச்சயம் வெளிக் கொண்டு வந்து விடுவேன்.


நான் டிடெக்டிவ் அல்ல... யாரையும் வேவு பார்க்கத் தெரியாது. அல்லது தடயம் தேடி வீடுகளுக்குள் அத்து மீறி நுழைய அதிகாரம் கிடையாது. ஆனால் உங்களுக்கு இதெல்லாம் சாத்தியம் ஸ்டீல்! இங்கே நடக்கும் தில்லுமுல்லுகள் பற்றிய என் தெளிவான ஞானமும்
உங்களுடைய துப்பறியும் சாமர்த்தியமும் கைகோர்த்தால் இந்தத் தொடர் கொலைகளை சுலபமாக துப்புத் துலக்கிவிட முடியும். அறிவிக்கப்பட்டுள்ள வெகுமதியான பத்தாயிரம் டாலர்களை நாம் இருவரும் பகிர்ந்து கொள்ளலாம். என்ன சொல்கிறீர்கள்?


வெர்னான் முன் வைத்த பேரம் ஸ்டீலுக்கு சபலத்தை ஏற்படுத்தியது என்னவோ நிஜம் தான். ஆனால் நடைமுறை சாத்தியமா என்று பார்த்தால் நிறைய ஓட்டைகள் இருப்பது புரிந்தது. எனவே, மறுப்பாக தலையை ஆட்டியவாறு இருக்கையை விட்டு எழுந்தார் ஜான் ஸ்டீல்.
ஸாரி... வேறொரு கேஸ் விஷயமாக நான் இங்கிலாந்து செல்லவிருக்கிறேன்.... உனக்கு நான் உதவினால் அமெரிக்க போலீஸாருக்கு என்னைப்பற்றி தப்பபிப்பிராயம் ஏற்பட வாய்ப்புண்டு.
ஓ.கே. ஸ்டீல்.. ஒருவேளை நீங்கள் மனத்தை மாற்றிக் கொண்டால் என்னை சந்திக்க நேரே இங்கேயே வந்து விடலாம். பெரும்பாலான இரவுகளில் நான் இங்கே தான் வருவேன்.


அந்த விஷயம் இத்தோடு ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும் தான். ஆனால் அவர் ஊர்திரும்ப இரு தினங்கள் இருக்கையில் காவல்துறை அதிகாரியான டேவ் பர்னட், மற்றும் அவருடைய மனைவி லிஸாவோடு டின்னர் உண்ணப் போயிருந்தார். அப்போது 'சிவப்பு சாவி' தொடர் கொலைகள் பற்றி பேச்சு வந்தது..
ஹாகனுக்கு என் திறமையில் எப்போதுமே நம்பிக்கை கிடையாது... இந்த தொடர் கொலைகளை காரணம் காட்டி என் எதிர்காலத்தையே நாசம் செய்ய முயற்சிக்கிறார். அதை துப்புத் துலக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்துவிட்டு, மற்ற வேலைகளையும் நிறைய என்னிடம் கொடுத்திருக்கிறார்.
எதிலுமே முழுக்கவனம் செலுத்த முடியாமல் வேலைப்பளு திணற வைக்கிறது.
டேவின் பேச்சு ஸ்டீலை சிந்திக்க வைத்தது. அவன் ஸ்டீலுக்கு நிறைய ஒத்தாசை பண்ணியிருக்கிறான். நன்றிக் கடனை தீர்க்க இப்போது தனக்கு ஒரு வாய்ப்புக் கிட்டியிருப்பதாக ஸ்டீல் நினைத்தார்.. வெர்னான் பேரம் பற்றி அவ்விருவரிடமும் பிரஸ்தாபித்தார்.
நான் வெர்னானின் பேரத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் உனக்கு ஒத்தாசையாக இருக்க முடியும் டேவ் நாங்களிருவரும் உனக்கு அவ்வப்போது தெரிவிக்கிறோம்.
உன் அதிகார பலத்தை பயன்படுத்தி எங்களுடைய முயற்சிக்கு நீ ஆதரவு தரமுடியும். முத்தரப்புக் கூட்டு இது என்று கூட வைத்துக் கொள்ளலாம்.


டேவின் முகம் பிரகாசமடைந்தது.
மேலோட்டமாகப் பார்க்கும் போது ஒரு விஷப்பரீட்சையாகத் தோன்றினாலும் அதில் அர்த்தம் இருப்பதாகவே உணர்கிறேன். அந்த வெர்னானை எனக்கும் தெரியும். ஹாகன் வசிக்கும் பிளாக்கில் தான் அவனும் வசிக்கிறான். அவனுடைய நடவடிக்கைகள் கிறுக்கனோ என்று சந்தேகிக்கத் தூண்டும். ஆனால் அவனுடைய ஐடியாக்கள் தூள் கிளப்புவையாக இருக்கும். ஒரு
முதல்தர எழுத்தாளனாகவும் இருந்தான். ஓ.கே. ஸ்டீல் எனக்கு நீ உதவ முன் வந்தமைக்கு மிக்க நன்றி.
மறுநாள் இரவு வெர்னானை சந்திக்க சென்றார் ஜான் ஸ்டீல். அதைக் கேட்டு சந்தோஷப்பட்டவன் பர்னெட் விஷயத்தில் கொஞ்சம் தயக்கம் காட்டினான்.
போலீஸாருடன் இணைந்து செயல்படுவதில் எனக்கு இஷ்டமில்லை... ஆனால் பர்னட் ஒரு நல்ல அதிகாரி
இருவரும் வெளியேறி காலாற நடந்த போது வெர்னான் தான் யூகத்தை வெளியிட்டான்.
கொலையாளி ஒரு வக்கிர குணம் படைத்த ஒரு மனநோயாளி என்கிற கோணத்தில் ஆராய்ச்சியைத் தொடர்கிறார்கள்... ஆனால் அந்த அனுமானம் முற்றிலும் தவறு என்பது என் கருத்து. இந்த கொலைகள் ஒரு கும்பலின் கைவரிசை என்பது என் கணிப்பு.


இதைச் சொல்லும்போது அவன் குரலில் வெளிப்பட்ட அழுத்தம் ஸ்டீலை அயர வைத்தது.
ஆனால் இது சமூக விரோதக் கும்பலின் வேலையாக எனக்குத் தோன்றவில்லை.
ஏனெனில். தொழில்முறை கொலையாளிகள் இப்படி 'சிவப்பு சாவி'யை ஒவ்வொரு இடத்திலும் விட்டுப் போவது போன்ற கிறுக்குத்தனத்தை செய்கிறவர்கள் அல்லவே!
ஆமாம்தான்...! ஆனால் யாரோ ஒரு சமர்த்தன் போலீஸாரை திசைதிருப்ப இப்படியொரு யுக்தியை கையாளலாமே! தாதா கும்பலைச் சேர்ந்த ஜோ கனோலி இம்மாதிரி விஷயங்களில் படு கில்லாடி!
தன்னுடைய இருப்பிடம் நெருங்கியதும் வெர்னான் நின்றான்.... அவனுடைய கால் கட்டை விரல் தரையில் கோலமிட்டுக் கொண்டிருந்தது.
இதுவரை கொலை செய்யப்பட்ட நபர்கள் ஒவ்வொருவருமே கனோலியோடு ஏதாவது ஒரு வகையில் உரசி அவனுடைய கோபத்தைக் கிளறியவர்களாவர். உதாரணமாக பார்க்மேன்...
தன்னுடைய பத்திரிகையில் சமூக விரோத கும்பல்களுக்கு எதிராக - குறிப்பாக கனோலியின் நடவடிக்கைகளைக் கண்டித்து - தொடர்ந்து எழுதி வந்திருக்கிறார்.
இரவு வேளைகளில் கனோலி இரகசியமாக எங்கோ போய் வருகிறான்.. இரவு சந்திப்பு மையமான 'தி ப்ளூ கிரிஸ்டலை விட்டு வெளியேறும் அவன் 12வது அவென்யூவில் உள்ள தன் இருப்பிடத்துக்குச் செல்லாமல் வேறெங்கோ போகிறான்.
அவன் அப்படி எங்கே போகிறான் என்கிற உண்மை நமக்குத் தெரிய வந்தால் ஒரு 'பிடி' கிடைத்த மாதிரி இருக்கும்.
ஓ.கே. கனோலியை நான் கவனிக்கிறேன்.


திட்டவட்டமான காரணம் ஏதுமில்லை தான். ஆனால் வெர்னனின் யூகத்தில் ஓரளவு உண்மை இருப்பதாகத் தோன்றியதால் மறுநாள் ஒரு வாடகை காரை எடுத்துக் கொண்டு 'ப்ளூ கிரிஸ்டல்' நைட் கிளப்புக்கு சென்ற ஜான் அருகே இருந்த ஒரு குறுகலான சந்தில் காரை நிறுத்தினார்.
அந்த கட்டிடத்திலிருந்து கனோலி வெளிவரும் வரை நான் பொறுமை காக்க வேண்டுமா அல்லது உள்ளேயே போகலாமா?
உள்ளே போவதினால் தப்பாகிவிடாது என்ற தீர்மானத்திற்கு வந்த ஸ்டீல் உள்ளே நுழைந்த போது முரட்டுத் தோற்றமுடைய இரு ஆசாமிகள் அவரை உறுத்துப் பார்ப்பதை உணர்ந்தார்.
கனோலியின் ஆட்களாகத்தானிருக்கும்... நான் அந்நியன் என்பதால் அவர்களுடைய முகத்தில் இறுக்கம் நிலவுகிறது.
வேறொரு நபர் அப்போது அங்கே வர பத்திரிகைகளில் ஏற்கனவே அந்த நபரின் படத்தை பார்த்திருப்பதால் அவன் தான் கனோலி என்பதை ஸ்டீல் புரிந்து கொண்டு விட்டார். அந்த இரு முரடர்களும் கனோலியின் காதில் ஏதோ கிசுகிசுக்க சட்டென்று அவனுடைய பார்வை ஸ்டீலின் மீது திரும்பியது. அதைத் தொடர்ந்து அவன் நேரே அவரை நோக்கி வந்தான்.
நீங்கள் ஸ்டீல் தானே? பிரைவேட் டிடெக்டிவ்? நீங்கள் இங்கே நியூயார்க் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன்.
ஆமாம்... நான் ஸ்டீல் தான்!


ஸ்டீலின் கையைப் பற்றிக் குலுக்கினான் கனோலி. எலும்புகள் நொறுங்கிவிடுமோ என்கிற மாதிரியான இரும்புப்பிடி... இதை ஸ்டீல் எதிர்பார்க்காமலில்லை. பதிலுக்கு அவரும் தாராளமாகவே திருப்பிக் கொடுத்தார்.
உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி ஸ்டீல்
அவனுக்கு பிராணன் போகிற மாதிரியான வலி. ஆனால் படு மோசமாக இளித்து மறைத்து விட்டான்.
இது உங்களுடைய வீடு மாதிரி... இங்கே வருகிற மக்கள் யாராக இருந்தாலும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதே எங்களுடைய அவா.
பின்னர் கனோலி தன் இரு அடியாட்களிடம் ஏதேதோ நிறைய பேசினான். உதட்டசைவை வைத்து உரையாடலை கணிப்பதில் ஸ்டீல் நிபுணர். அவனுடைய உதடுகளை கவனிக்க ஏதுவாக இருக்கையை நகர்த்தி அமர்ந்து கொண்டார். முடிவாக தன் வாட்சை பார்த்துவிட்டு அவன் தன் ஆட்களிடம் சொன்னது ஸ்டீலை நிமிர்ந்து உட்கார வைத்தது.
இன்றிரவு நாம் அங்கே போகிறோம். அடுத்த பதினைந்தாவது நிமிடம் காரைக் கொண்டு வந்து வாசலில் நிறுத்த வேண்டும் என்று பெர்னியிடம் சொல்.


அடுத்த ஐந்தாவது நிமிடம் படு காஷுவலாக எழுந்து அங்கிருந்து வெளியேறிய ஸ்டீல் தன் காரில் ஏறி அமர்ந்து காத்திருந்தார். சற்றைக்கெல்லாம் வாசலில் ஒரு சொகுசுக் கார் வந்து நின்றது. அதையடுத்து தன் சகாக்களுடன் வெளியே வந்த கனோலி காரில் ஏறி அமர்ந்தான்.


கனோலியின் கார் நகரத் தொடங்கியதும் சந்தேகம் எழாதவாறு இடைவெளிவிட்டு பின் தொடர்ந்தார் ஸ்டீல்.
ம்ம்... வடதிசையில் புறநகர் பகுதியை நோக்கி விரைகிறது கார். 12வது அவென்யூவில் உள்ள தன் வீட்டிற்கு அவன் போய்க் கொண்டிருக்கவில்லை என்பது நிச்சயம்.


பல மைல் பிரதான சாலைகளின் வழியாக சென்ற கனோலியின் கார் ஓரிடத்தில் பக்கவாட்டு சாலையில் திரும்பியது... பௌர்ணமி தினமாதலால் நிலவு பகல் போல் ஒளிர்ந்து கொண்டிருந்தது. தன் காரின் முகப்பு விளக்கை அணைத்துவிட்டுப் பின் தொடர்ந்தார் ஸ்டீல்.



ஒரு பிரம்மாண்டமான மாளிகையின் கேட்டைத் தாண்டி அப்பால் போய் நின்றது அந்தக் கார். சட்டென்று தன் காரை சாலையை விட்டு விலக்கி ஒரு புதரின் பின்னால் கொண்டு போய் நிறுத்தினார் ஸ்டீல். காரை விட்டிறங்கிய கனோலி தன் சகாக்களுடன் மாளிகையின் கேட்டை நோக்கி நடந்தான்.
நேராக காரை ஏன் அவர்கள் உள்ளே கொண்டு போகவில்லை... இந்த திருட்டுத்தனம் எதற்கு?
அவர்கள் உள்ளே நுழைந்து கட்டிடத்தை நோக்கி முன்னேறிய வேளையில் ஸ்டீல் காரை விட்டிறங்கினார். கேட்டின் வழியாக நுழைந்தால் கனோலியின் கார் டிரைவர் பார்த்து விடுவான் என்பதால் காம்பவுண்டு சுவரில் ஏறி உள்ளே குதித்தார்.
தலைவாசலை நோக்கிப் போகாமல் ஏனோ பக்கவாட்டில் போகிறார்கள்... திருட்டுத்தனமாக உள்ளே நுழையும் உத்தேசமோ?
ஆனால் கனோலி அழைப்பு மணியை அழுத்தினான், உள்ளே இருந்து வந்து கதவைத் திறந்த நபரை பார்த்த ஸ்டீலுக்கு ஏகப்பட்ட அதிர்ச்சி.
ஹே... அவர் - டீன் ஸ்ட்ராட்டன் அல்லவா?
ஓ.கே. உள்ளே வாருங்கள்... எல்லோரையும் அனுப்பி விட்டு நான் இப்போது தனியாகத்தான் இருக்கிறேன்.
டி.வி.யில் ஸ்ட்ராட்டனை அடிக்கடி பார்த்திருக்கிறார் ஸ்டீல்... ஆனால் ஒரு பிரபல பிரமுகர் என்பதாக!


அதையடுத்து தரைத் தளத்தில் ஓர் அறையில் விளக்கு எரியத் தொடங்கியது..... ஒட்டுக் கேட்கும் எண்ணத்தோடு அந்த இடத்தை நெருங்கினார் ஸ்டீல்
குற்றங்களையும், சமூக விரோதிகளையும் கடுமையாக விமரிசனம் செய்து வரும் ஸ்ட்ராட்டனுக்கும் கனோலிக்குமிடையே இப்படியொரு உறவா?
அவர்களிடையே நடந்த உரையாடல்களில் அங்கேயும் இங்கேயுமாக சில வார்த்தைகள் அவருடைய செவியை வந்தடைந்தன.... ஆனால் அவற்றைக் கொண்டு ஸ்டீல் எதையுமே புரிந்து கொள்ள முடியவில்லை. அப்போது எங்கிருந்தோ ஓடி வந்த நாய் ஒன்று ஸ்டீலை பார்த்து குரைக்கத் தொடங்கியது.
நாயை தவிர்த்துக் கொள்ள அங்கிருந்து ஓட்டம் பிடிப்பதை தவிர வேறு வழியில்லாமல் போயிற்று ஸ்டீலுக்கு.
வல்! வல்!
நாய் விடாது குரைக்கவே கனோலியும் இரு முரடர்களும் வெளியேறி ஓடி வந்தார்கள்
யார்... யார் வந்தது?
தெரியவில்லை... அதோ ஓடுகிறான் - விரட்டிப் பிடியுங்கள்.


முதலில் ஸ்டீலை துரத்திக் கொண்டு ஓடி வந்த நாய் திடீரென்று திரும்பி பின்னால் வந்தவர்களை நோக்கி ஓடத் தொடங்கியது. அது அவர்களுடைய வழியில் குறுக்கிட்டதால் ஒருவன் இடறி விழுந்தான்.
விடாதீர்கள்... பிடியுங்கள்
ஹேய்...
சைலன்ஸர் பொருத்தப்பட்ட துப்பாக்கியின் இயக்கம் மெலிதாக கேட்டதை தொடர்ந்து தன் அருகே தோட்டா ஒன்று சீறிச் சென்றதையும் ஸ்டீல் உணர்ந்தார்.
டுப்!
ஸ்டீல் தன் காரை சென்றடைய குறுக்கு வழி பிரதான கேட்டின் வழியாகப் போவது ஒன்றுதான். ஆனால் அவர் அப்படி ஓடி வந்தபோது கனோலியின் கார் டிரைவர் அவரை எதிர்கொண்டான்.
ஸ்டீல்!
அவனுடைய தாடையில் இடியென ஒரு குத்துவிட்டார் ஸ்டீல்... அவன் மயக்கம் போட்டு விழுந்தான்.
கும்!


ஸ்டீல் தன் காரை கிளப்பி சாலை மீது ஏற்றியபோது நெருங்கி வந்துவிட்ட கனோலி சரமாரியாக சுட்டான். காரின் கண்ணாடிகள் நொறுங்கிப் போயின. நல்லவேளை ஸ்டீல் தப்பித்துக் கொண்டுவிட்டார்.
டுமீல்!
டுமீல்!
டுமீல்!


காரை உச்ச வேகத்தில் பறக்க விட்டார் ஸ்டீல். அதன் பாதையில் இருந்த கனோலி உயிர் தப்ப பக்கவாட்டில் சரிந்தான்.
விர்ர்ரூம்ம்ங்...
ஆ ஆ!


மன்ஹாட்டனை நோக்கி காரை விரைந்து செலுத்திச் சென்ற வேளையில் ஸ்டீல் சிந்தித்தார்.
ஸ்ட்ராட்டனின் இடத்தில் தன்னை பிறர் பார்த்து விட்டதை மறைக்க கனோலி கொலை செய்யவும் துணிந்து விட்டான் என்றால் விவகாரம் நிச்சயம் படுமோசமானதாகத்தான் இருக்க முடியும்.


மறுநாள் காலை போலீஸ் தலைமையகம் சென்ற ஸ்டீல் டேவ் பர்னெட்டின் அலுவல் அறைக்குச் சென்று அவனை சந் சந்தித்தார். நடந்ததை விவரித்தார்.
கனோலிக்கும் ஸ்ட்ராட்டனுக்குமிடையே இப்படி ஒரு உறவா...? நண்பரே... இது 'டைனமைட்' மாதிரியான சங்கதி! ஆனால் -நான் செய்யக்கூடியது எதுவுமே இல்லை... 'சிவப்பு சாவி' தொடர்
கொலைகளையும் இதையும் சம்பந்தப்படுத்த எந்தத் தடயமும் இல்லை. கனோலி ஸ்ட்ராட்டனை போய் பார்த்தது குற்றம் என்று சொல்வதற்கும் இடமில்லை.
அவன் என்னைக் கொல்ல முயன்றானே... அது குற்றமில்லையா?
அதை நிருபிக்க நம்மிடம் போதிய ஆதாரம் இல்லையே. நீ அங்கே போனது நியாயமற்ற செயல் அல்லவா? மேலும் அவர்கள் அது தற்காப்பு முயற்சி என்று சொல்லி தப்பித்துக் கொண்டு விடுவார்கள். எனக்கென்னவோ கனோலிதான் 'சிவப்பு சாவி' கொலைகாரன் என்று எண்ணத் தோன்றவில்லை.
ஓரிரு நிமிடங்கள் ஜன்னல் வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு ஸ்டீல் அப்புறமாகப் பேசலானார்.
மேலோட்டமாகப் பார்த்தால் கனோலிக்கு எதிராக எந்த ஆதாரமும் இல்லை... ஆனால் வெர்னானின் மதிநுட்பத்தில் எனக்கு அபார நம்பிக்கையுண்டு.. இம்மாதிரி குழப்பமான சங்கதிகளில் அவனுடைய தீர்மானங்கள் ரொம்பத் தெளிவாக இருக்கும்.


அப்போது அஸிஸ்டெண்ட் கமிஷனர் ஹாகன் உள்ளே வந்தார். பர்னட் ஸ்டீலை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தபோது அவர் முகத்தைச் சுழித்தார்.
என்ன கேலிக்கூத்து இது பர்னட்? பிரைவேட் டிடெக்டிவ்வை உனக்கு ஒத்தாசை செய்ய கூட்டு சேர்க்கிறாயா?
பின்னர் வெறுப்பை தாராளமாக உமிழும் தன் விழிகளை ஸ்டீல் பக்கம் திருப்பினார்.
நான் எதையும் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று வெளிப்படையாகப் பேசும் சுபாவம் உடையவன் ஸ்டீல். பிரைவேட் டிடெக்டிவ் என்றாலே ஏனோ எனக்கு ஏகப்பட்ட வெறுப்பு. உன் அலுவல் காரணமாக நீ இங்கே வந்திருந்தால் அதை முடித்துக் கொண்டு உடனே இடத்தைக் காலிசெய்.
தன்னைப் பற்றி அவர் சொன்ன வார்த்தைகளுக்காக ஸ்டீல் துளியும் கவலைப்படவில்லை. ஆனால் அவமானத்தால் முகம் சிவந்து போன டேவ்க்காக வருத்தப்பட்டார் டேவை நோக்கி தலையை மட்டும் அசைத்துவிட்டு ஹாகனைக் கண்டு கொள்ளாமல் அங்கிருந்து புயலென வெளியேறினார் ஸ்டீல்.
மனுஷனா இவர்... ஈவு இரக்கமற்ற அரக்கன்.... பாவம் டேவ்


அங்கிருந்து வெளியேறிய ஸ்டீல் நேராக வெர்னானின் இருப்பிடத்திற்குச் சென்றார். ஸ்ட்ராட்டன் விவகாரத்தை விவரித்தார். அதைக் கேட்டு வெர்னான் வியப்படைந்தானே தவிர அதிர்ந்து விடவில்லை.
நடந்த கொலைகளுக்கும் ஸ்ட்ராட்டனுக்கும் சம்பந்தம் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. கனோலியோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கும் ஊழல் அரசியலவாதிகளில் அவரும் ஒருவர்.
அந்தச் சம்பவம் நமக்கு எந்தவிதத்திலும் பயன் அளிக்கும் என்றும் தோன்றவில்லை. அதே சமயம் கனோலியை நாம் அலட்சியப் படுத்துவதற்கில்லை.


ஆனால் ஸ்டீல் மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்தார். ஸ்ட்ராட்டனுக்கும் கொலைகளுக்கும் சம்பந்தம் இருக்கும் என்பது அவருடைய கணிப்பு. வெகுநேரம் இக்கருத்தை வலியுறுத்தி பேசிக் கொண்டிருந்தார். முடிவாக அவர் புறப்பட ஆயத்தமான போது வெர்னான் சொன்ன விஷயம் மறுக்க முடியாத அதே சமயம் கிலியூட்டும் நிஜம்.
கனோலியின் டிரைவர் உங்களை பார்த்துவிட்டதாக சொல்கிறீர்கள்... உங்களை தீர்த்துக்கட்ட கனோலி தீவிரமாக முனையக்கூடும் ஜாக்கிரதையாக இருங்கள்...
இல்லையேல் கொலைகள் பட்டியலில் அடுத்து இடம் பெறும் பெயர் உங்களுடையதாக இருந்துவிடப் போகிறது.


இரண்டு நாட்கள் கழித்து ஹோட்டலில் உச்சி மாடியில் தன் அறையில் தூங்கிக் கொண்டிருந்த ஸ்டீல் ஆறாவது புலனால் எச்சரிக்கப்பட்டவர் போல் திடுமென விழித்துக் கொண்டார்
என்ன அது?
ஜன்னலருகே ஏதோ அசைவதாக உணர்ந்தார். முகமூடியணிந்த ஓர் உருவம் ஜன்னல் வழியாக அறைக்குள் குதித்தது.
அவனுடைய கையில் துப்பாக்கி இல்லை என்பதாகத் தெரிகிறது
சட்டென்று மின்னல் வேகத்தில் படுக்கையிலிருந்து துள்ளி எழுந்த ஸ்டீல் தன் சக்தியனைத்தையும் ஒன்று திரட்டி எதிரி மீது ஒரே பாய்ச்சலாக பாய்ந்தார்.


எதிராளியின் தொண்டையை நோக்கி அவருடைய கை நீண்டபோது பதிலுக்கு மருந்து தோய்ந்த துணி ஒன்றை அவன் இவருடைய முகத்தில் பதித்தான். அது மயக்க மருந்து என்று நொடியில் புரிந்து கொண்டார் ஸ்டீல்.
மூச்சுக் குழல் இறுகியது... புலன்கள் செயலிழந்து போய்க் கொண்டிருந்தன. ஆனால் எஞ்சியிருந்த சக்தியனைத்தையும ஒன்று திரட்டி அவனுடைய தாடையில் இடியென ஒரு குத்துவிட்டார் ஸ்டீல். அவன் நிலைகுலைந்து தடுமாறினான்.
மயக்க வாயு ஸ்டீலை தடுமாற வைத்தது. எதிராளியும் இனி அங்கே இருந்தால் ஆபத்து என்று ஜன்னல் வழியாக வெளியே குதித்தான்.


எதிராளியை மடக்க எண்ணிய ஸ்டீல் தானும் ஜன்னல் வழியாக வெளியே குதித்தார். ஆனால் வந்தவனோ ஆபத்துகால மாற்று வழி வழியாக சரசரவென்று கீழிறங்கிப் போய்க் கொண்டிருந்தான்.
மயக்க மருந்து முழுமையாக அவர்மீது ஆதிக்கம் கொள்ளவே அப்படியே சுயவுணர்விழந்து தலைகுப்புற விழுந்தார்.
அவருக்கு சுயவுணர்வு திரும்பி வரப் பெற்றபோது எதிரி எப்போதோ போய்விட்டிருந்தான். மீண்டும் தன் அறைக்குள் வந்தார் ஸ்டீல். உள்ளே இரு முனைகளிலும் மரத்துண்டுகள் இணைக்கபபட்ட ஒரு வயர் துண்டும் அத்தோடு ஒரு சிவப்பு நிற சாவியும் கிடைக்கக் கண்டார்.
என்னை மயக்கமுறச் செய்து வயரினால் கழுத்தை நெறித்துக் கொல்லும் நோக்கத்தோடு வந்திருக்கிறான்... மயிரிழையில் நான் உயிர் தப்பியிருக்கிறேன்.


உடனே டேவுக்கு போன் செய்தார் ஸ்டீல்... தூங்கிக் கொண்டிருந்த டேவ் உடனே கிளம்பி வந்து சேர்ந்தான்.
மதியூகம் மிக்க என் உளவாளிகள் சிலர் சற்று நேரத்தில் இங்கே வந்து சேர்வார்கள்... மயக்க மருந்தை ஆராய்வோம். அது எங்கிருந்து வந்தது என்று தெரிநது கொள்ளப் பார்ப்போம். மாடியையும், அவசர வழியையும் ஆராய்வோம்.


மூன்று தினங்களுக்குப் பின் ஒரு ஹோட்டலில் வெர்னானை சந்தித்தார் ஸ்டீல்.
சொன்னேனில்லையா - கனோலி உங்களை கொல்ல முயற்சிப்பான் என்று..! இம்முறை தோற்றுவிட்டான். ஆனால் நிச்சயம் மறுபடியும் முயற்சி செய்வான்.
ஹ்ம்... கனோலி தான் 'சிவப்பு சாவி' கொலைகாரன் என்று உன் அளவுக்கு உறுதிபட நம்ப ஏனோ என்னால் முடியவில்லை.



தன்னை கொலை செய்ய முயன்றதாக கனோலி மீது கொலைக் குற்றம் சாட்டிவிடுவது சிறந்தது என்று ஸ்டீல் கருத்து தெரிவித்தார்.
அதிரடியாக போய் குற்றம் சாட்டுவோம். அதை அவன் எப்படி ஏற்றுக் கொள்கிறான் என்று பார்ப்போம். நீ அடிக்கடி சொல்வாயே... ஒருவன் குற்றவாளி என்பதை ஒரு கண் இமைப்பில் அல்லது உதட்டுச்
சுழிப்பில் கண்டுபிடித்து விடலாம் என்று. அதை ஆதாரமாக வைத்து எதுவும் செய்ய முடியாது தான். ஆனாலும் உன் யூகத்தை அது உறுதிப்படுத்துமல்லவா?
ஓ... அதையும் தான் செய்து பார்ப்போமே!




மறுநாள் இரவு தன் பழைய மாடல் காரில் ஸ்டீலையும் அழைத்துக் கொண்டு போனான் வெர்னான்.
காட்டுத்தனமாக வண்டியை ஓட்டுகிறாய்... எனக்கு பயமாக இருக்கிறது.
என் வாழ்நாளில் இதுவரை ஆக்ஸிடெண்ட்டே நிகழ்ந்ததில்லை... தைரியமாக இருங்கள்.




காரை நிறுத்திவிட்டு வந்த போது சற்றுத்தள்ளி ஒரு கெடிலாக் கார் நிற்பதைக் கண்ணுற்றதும் வியப்பில் விசிலடித்தான்.
அது ஸ்ட்ராட்டனின் கார்.... வெளிப்படையாகவே கனோலியை சந்திக்க வந்திருக்கிறார் இம்முறை! என்ன விஷயமோ?
எனவே, கனோலியோடு அவருக்குரிய தொடர்பு இரகசியமானது அல்ல என்றாகிறது.


ஸ்டீலும், வெர்னானும் உள்ளே போய் மேஜையில் அமர்ந்த போது கனோலியின் ஆட்கள் சிலர் வியப்போடு நோக்கினார்கள். அவர்களில் ஒருவன் வெர்னானுக்கு நன்கு அறிமுகமானவன்.
உங்களுடைய பாஸ் இங்கே இருக்கிறாரா என்ன ?
அவரை பார்க்க வேண்டாமா? தன் அலுவல் அறையில் மும்முரமாக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்... போய் தெரிவிக்கிறேன்.


நேரம் ஓடிக் கொண்டிருந்தது... ஆனால் கனோலி அங்கே வரும் அறிகுறியே இல்லை. திடீரென்று, அடக்கமாக எழுந்த தோட்டா முழக்கமும் கைகலப்பின் ஓசையும் கேட்டது. வெர்னானும் ஸ்டீலும் எழுந்தோடி வந்தனர்.. கனோலியின் அலுவல் அறைக்கு வெளியே அவனுடைய ஆட்கள் பதற்றத்தோடு நின்றிருந்தனர்.. ஒருவன் தடதடவென்று கதவை தட்டினான்.
நிச்சயம் அது துப்பாக்கி முழக்கம் தான்.
டப்!
டப்!
பாஸ்... ஹே... பாஸ்... உள்ளே என்ன நடக்கிறது! உங்களுக்கு ஒன்றும் ஆகவில்லையே?



மறுமொழி ஏதும் இல்லாமல் போகவே பலமாக மோதி கதவைத் திறந்தான் அந்த ஆசாமி.
அடக் கடவுளே.. யாரோ ஜன்னல் வழியாக இவரை சுட்டிருக்கிறார்கள்.
தலைகுப்புற விழுந்து கிடந்த கனோலியின் தலைக்கு அருகே சிவப்பு சாயம் பூசப்பட்ட ஒரு சாவி கிடந்தது.
வெர்னான் செய்வதறியாது திகைத்து நிற்க... அவனுடைய காதில் கிசுகிசுத்தார் ஸ்டீல்.
கனோலி தான் 'சிவப்பு சாவி' கொலைகாரன் என்றாயே... என்ன ஆயிற்று பார்த்தாயா ?
இதை நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை... சென்ற நிமிடம் வரை கனோலி தான் கொலைகாரன் என்று சர்வ நிச்சயமாக நம்பிக் கொண்டிருந்தேன்.
ஏதாவது பருகிவிட்டு வருவதாக வெர்னான் வெளியேறிப் போய்விட்டான்... ஆனால் காவல்துறையினர் வந்து சேரும்வரை ஸ்டீல் அங்கேயே நின்று கொண்டிருந்தார். டேவ் பர்னட் ஏனோ வரக்காணோம்... ஆனால் ஹாகன் வந்திருந்தார். ஸ்டீலை அங்கே பார்த்ததும் ஆங்காரமாகப் பேசலானார்.
அதெப்படி... எங்கே எது நடந்தாலும் டாண் என்று அங்கே வந்துவிடுகிறாய் ஸ்டீல்? நீ குறுக்கிடுவதை நான் அறவே விரும்பவில்லை... ஓடிப்போ இங்கிருந்து.


அப்போது அங்கே வந்து சேர்ந்த ஸ்ட்ராட்டன் ஹாகனிடம் சூடாகப் பேசலானார்.
ஹாகன் என்ன தான் நடக்கிறது? இம்முறையாவது குற்றவாளியை தேடிக் கண்டுபிடிப்பீர்களா... இல்லை - வாடிக்கையான நொண்டி சமாதானங்கள்தான் சொல்வீர்களா?
ஹாகனின் முகம் அவமானத்தால் சிவந்து போனது
கொலையாளியை இம்முறை நிச்சயமாக பிடித்து விடுவோம்... ஆனால் நீங்கள் இப்படி வந்து அதிகாரம் பண்ணுவதை விட்டொழியுங்கள்... இன்னமும் நீங்கள் கவர்னர் ஆகிவிடவில்லை - ஞாபகம் இருக்கட்டும்.
ஸ்ட்ராட்டனுக்கும் செத்துப்போன கனோலிக்குமிடையே நிலவிய உறவு ஞாபகத்துக்கு வரவே ஸ்ட்ராட்டனை ஆராயும் விதமாக நோட்டம் விட்டார் ஸ்டீல்.. அவருடைய கழுகுப் பார்வையில் பளிச்சென்றிருந்த ஸ்ட்ராட்டனின் பாண்ட்டில் ஓரிடத்தில் தூசு அப்பிக் கொண்டிருந்தது பட்டது.
அது எப்படி அங்கே வந்திருக்க முடியும்? அவர் அழுக்கடைந்த சுவரின் மீது சரிந்து நின்றிருக்க வேண்டும் அல்லது ஏறியிருக்க வேண்டும்.


சட்டென்று அவருடைய மூளை வேறொரு கோணத்தில் வேலை செய்தது.. உடனே பக்கவாட்டு வாசல் வழியாக வெளியேறி கட்டிடத்தின் பின்பக்கம் சென்றார். கும்மிருட்டாகக் கிடந்தது அந்த இடம்.... அங்கிருந்து பார்த்தால் கனோலியின் அலுவல் அறை ஜன்னல் தெரிந்தது.
கொலையாளி இங்கிருந்து கனோலியை சுட்டிருக்கலாம்.
ஜன்னலுக்கு அப்பால் காவல்துறையை சேர்ந்த நபர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். ஸ்டீல் சுவரின் மீது விரல்களால் தடவினார். தூசு தாராளமாக ஒட்டிக் கொண்டது.
செங்கல் சுவரில் சுண்ணாம்பு பூசப்பட்டிருக்கிறது. இதன் மீது சாயும் நபரின் ஆடையில் ஸ்ட்ராட்டனின் பாண்ட்டில் ஒட்டிக் கொண்டிருந்த மாதிரி தூசு அப்பிக் கொள்வது நிச்சயம்.
ஹாகனின் ஆட்களில் ஒருவன் ஸ்டீலை பார்த்து விட்டான்.
சீஃப் அவ்வளவு கடுமையாகச் சொல்லியும் நீங்கள் இன்னமும் இங்கிருந்து போகவில்லையா?



இனியும் அங்கே நின்றால் மரியாதை கெட்டுவிடும் என்று வெளியேறி நடந்தார் ஸ்டீல். கார்கள் நின்றிருந்த இடத்தைச் சென்றடைந்த அவருடைய கவனத்தை ஸ்ட்ராட்டனின் கார் ஈர்த்தது. கதவுகள் பூட்டப்பட்டிருந்தன.. தன் பையிலிருந்த டார்ச்சை அடித்து உள்ளே நோட்டம் விட்டார்... க்ளவுஸ் வைக்கும் இடத்தில் கறுப்பு நிற க்ளவுஸ் ஒரு ஜோடி தொங்கிக் கொண்டிருந்தது.
சுவாரஸ்யமான சங்கதி தான் இது.
அப்போது அங்கே வந்து சேர்ந்த ஸ்ட்ராட்டன் பொரிந்து தள்ளினார்.
உனக்கென்ன பைத்தியமா? எதற்காக என் காரை ஆராய்ந்து கொண்டிருக்கிறாய்?
சும்மா ஆர்வம் காரணமாக பார்த்துக் கொண்டிருந்தேன்... அவ்வளவுதான்.
எனக்கு சம்பந்தமில்லாத சங்கதிதான் என்ற போதிலும் ஓரிரு விஷயங்கள் என் ஆர்வத்தை தூண்டி விட்டபடியால் கேட்கிறேன்.
உங்களுடைய பாண்ட்டில் ஒட்டிக் கொண்டிருக்கும் தூசுப்படலம் எப்படி வந்தது? அடுத்தபடியாக உங்களுடைய காரில் இருக்கும் காட்டன் க்ளவுஸ்.நியூயார்க்கில் வெப்பம் தகிக்கும் இந்நாளில் நீங்கள் கறுப்பு நிற க்ளவுஸ் அணிய வேண்டிய அவசியம் என்ன வந்தது?


ஸ்ட்ராட்டனின் கண்களில் கொலை வெறி தாண்டவமாடியது.
நீ என்ன சொல்ல வருகிறாய் என்று எனக்குப் புரியவில்லை... ஆனால் உனக்கு ஒன்று சொல்வேன் கேட்டுக் கொள் - நான் ஒரு பொல்லாத ஆசாமி... என்வழியில் குறுக்கிடுவது உனக்கு நல்லதில்லை.
எனக்கு ஏற்கனவே தெரிந்த சங்கதிதான் இது - மிஸ்டர் ஸ்ட்ராட்டன்!
ஸ்டீல் திரும்பவும் கிளப்பினுள் சென்று பாரில் இருந்த வெர்னானோடு போய் அமர்ந்தார்.
எனக்கென்னவோ ஸ்ட்ராட்டன் தான் தொடர் கொலைகளுக்குப் பொறுப்பாளி என்று தோன்றுகிறது... ஊழல் அரசியல்வாதிகளை சாடுபவர் ஹெப்ளர்... பார்க்மேனும் அப்படியே.. ஆனால் இந்த கனோலியை கொலை செய்ததற்கு என்ன காரணம் இருக்க முடியும்?
இது ஏதாவது ப்ளாக் மெயில் விவகாரமாக இருக்கலாம்! ஸ்ட்ராட்டனுக்காக அவன் பல சட்ட விரோத செயல்களை செய்திருக்கலாம். அதை அவன் வெளியிட்டால் அவருடைய அரசியல் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி விழும் அபாயம் இருந்திருக்கலாம்.



பிரச்னை இதில் என்னவென்றால் ஸ்ட்ராட்டன் தான் சிவப்புச் சாவி தொடர் கொலைகளை செய்தவர் என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள்... அவர்மீது குற்றம் சுமத்த நம்மிடம் ஏது ஆதாரம்!
இப்போதைக்கு இல்லைதான்... ஆனால் இனி நாம் நம் முழுக்கவனத்தையும் அவர்மீது செலுத்துவோம்.
மறுநாள் டேவ் பணிமுடிந்து திரும்புகையில் அவரை சந்தித்தார் ஸ்டீல்
ஸ்ட்ராட்டனை குறி வை டேவ்... அவரை விசாரி... வாரண்ட் வாங்கி அவருடைய வீட்டை சோதனை போடு.
நீ என்ன சொல்கிறாய்? நானாவது ஸ்ட்ராட்டனை விசாரிப்பதாவது? அவருக்கு இருக்கிற அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி என் வேலைக்கே அவர் உலை வைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.
சும்மா தகவல் சேகரிக்கிற மாதிரி கேள்விகளை கேளேன். அவர் மீது சந்தேகப்படுகிறாய் என்று காட்டிக் கொள்ளாதே. அவர் வழக்கம் போல் செயலாற்றிக் கொண்டிருக்கட்டும்.
யோசிக்கிறேன்


சிந்தனை வயப்பட்டவன் போல் மேலும் கீழுமாக நடந்த டேவ் சட்டென்று நின்றான்.
நார்த்போர்ட் அருகேயுள்ள லாஸ் தீவில் அவருக்கு ஒரு காட்டேஜும் ஹண்டிங் லாட்ஜும் உண்டு. வார விடுமுறை நாளில் அங்கே போகிற பழக்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்.
பணியாட்கள் யாரும் உடனிருக்க மாட்டார்கள். இன்றிரவே நாம் அங்கே போகலாம்.
... ஓ.கே. நல்ல யோசனை


அப்படி ஸ்ட்ராட்டன் அங்கே போய் வருவதை வாடிக்கையரகக் கொண்டிருக்கிறார் என்று அறிந்து வைத்திருந்த நபர் டேவ் மட்டுமில்லை– காட்டேஜுக்கு வந்து சேரும் வழித்தடத்தில் புதர் மறைவில் முகமூடியணிந்த ஓர் உருவம் பதுங்கிக் கிடந்தது.


சற்று நேரத்தில் அங்கே வந்த ஸ்ட்ராட்டனின் கார் வளைவில் சிறிது வேகம் மட்டுப்பட்டு திரும்பிய கணத்தில் புதர் மறைவிலிருந்த உருவம் அவரை குறி வைத்து சுட்டது.
டுமீல்!
அலறித் துடித்த ஸ்ட்ரரட்டன அப்படியே ஸ்டீயரிங் வீல்மீது சரிந்தார். தறிகெட்டு ஓடிய கார் அருகாமையில் இருந்த ஒரு மரத்தில் போய் மோதி நின்றது.
ஆஆஆ!
டமாா்!
காட்டேஜ் நோக்கிச் செல்லும் சாலையில் பொதுவாக எந்த நடமாட்டமும் இருப்பதில்லை... அடுத்து அந்த இடத்தை வந்தடைந்த முதல் நபர்கள் ஸ்டீலும், பர்னட்டும் தான்.
ஸ்ட்ராட்டன் தான்... சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்


உயிரற்றுக் கிடந்த அவருடைய கழுத்தில் சிவப்பு சாவி இணைக்கப்பட்ட கயிறு சுற்றிக் கிடந்தது.
ஸ்ட்ராட்டன் தான் கொலைகாரர் என்று நீ செய்த யூகமும் பொய்யாகிவிட்டது ஸ்டீல்.
'சிவப்பு சாவி' கொலைகாரனின் சேஷ்டை தான் அதுவும்.
பர்னட் சேதியை போலீஸ் தலைமையகத்துக்கு ரேடியோ மூலம் தெரிவித்துக் கொண்டிருந்த வேளையில் ஸ்டீல் அந்த இடத்தை தீவிரமாக ஆராய்ந்தார்.
இன்னொரு 'சிவப்பு சாவி' கொலை! இம்முறை ஒரு பெரிய பிரமுகர்... டீன் ஸ்ட்ராட்டன்!
தோட்டா எந்த திசையிலிருந்து வந்திருக்கும் என்பதை ஓரளவு தீர்மானித்த ஸ்டீல் கொலைகாரன் எந்த இடத்திலிருந்து சுட்டிருப்பான் என்பதை யூகிக்க முயற்சித்தார்.
இங்கே தான் அவன் நின்றிருந்திருப்பான்.


தரை குறிப்பிடும்படியாகக் கசங்கியிருந்த ஒரு இடம் அவருடைய கவனத்தை கவர்ந்தது. அந்த இடத்தில் புற்களும் கூட நசுங்கிப் போயிருந்தன. மண்டியிட்டு உற்று நோக்கிய போதில் தென்பட்ட சில அடையாளங்கள் பளிச்சென்று ஒரு விஷயத்தை அவருக்கு நினைவூட்டின
காலடித்தடம் தெளிவாகப் பதியவில்லை. ஆனால் இந்த அடையாளங்கள் கால்கட்டை விரலினால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஓ.. மை காட் - அவனாக இருக்குமோ?


காவல்துறையினர் அங்கே வந்தபோது பொழுது சாய்ந்து இருள்படரத் தொடங்கியிருந்தது. அதன்பின் 20 நிமிடங்கள் கழித்துத்தான் ஹாகன் அங்கே வந்து சேர்ந்தார்.
நீ இங்கேயுமா? உடனே கண்காணாமல் ஓடிப் போய் விடு ஸ்டீல்... இல்லையேல், உன்னை ஜெயிலுக்குள் தூக்கிப் போட்டு விடுவேன்... இதுவே நான் விடுக்கும் கடைசி எச்சரிக்கை


ஸ்டீல் மறுப்பாக சில விளக்கங்களை சொல்ல முற்பட்டார்.
உங்களுடைய வேலையில் குறுக்கிடுவது என் நோக்கம் அல்ல ஸார்.... தற்செயலாக நான் ஒரு வலுவான தடயத்தை கண்டுபிடித்திருக்கிறோம்.. அது என்னவென்றால்-
உன் அரைவேக்காட்டு கண்டுபிடிப்புகளை கேட்பதில் எனக்கு ஆர்வம் இல்லை... உன்னைப்பற்றி நீ மனதில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்_? கொலைகளை புலன் விசாரணை செய்வது எப்படி என்று எங்களுக்குத் தெரியும்.. நீ இடத்தைக் காலி பண்ணு!


அடுத்தது டேவ் மீது பாய்ந்தார் ஹாகன்.
கொலைகாரனை நழுவ விட்டுவிட்டு அப்புறம் வந்து சேருவதே உன் வாடிக்கையாகிவிட்டது - இல்லையா பர்னட்?
நான் ஒன்றும் தீர்க்கதரிசி இல்லையே ஸார் - அடுத்து கொலை எங்கே நடக்கும் என்று முன்கூட்டியே தெரிந்து கொள்ள.
டேவின் பேச்சைக் கேட்டு ஆத்திரமடைந்த ஹாகனின் முகம் கறுத்துப் போனது.
இம்மாதிரி எதிர்வாதம் பண்ணுகிற திமிரை எல்லாம் என்னிடம் வைத்துக் கொள்ளாதே... உன் இங்கிலிஷ் தோழனையும் அழைத்துக் கொண்டு இப்போதே கிளம்பு இங்கிருந்து.
மன்ஹாட்டன் திரும்பும் வழியில் டேவ் எதுவுமே பேசவில்லை.. ஸ்டீலை அவருடைய ஹோட்டல் வாசலில் இறக்கிவிட்டான்.
ஸாரி டேவ்... உனக்கு உதவி செய்கிறேன் பேர்வழி என்று கிளம்பி உனக்கு ஏகப்பட்ட தலைவலியை உண்டு பண்ணிவிட்டேன்.
சீ.. சீ.. அப்படி எல்லாம் எதுவுமில்லை ஜான்.. வீணாக அலட்டிக் கொள்ளாதே.. என்னைக் குதற ஹாகனுக்கு ஏதாவது ஒரு காரணம் வேண்டும்.... இம்முறை உன்னைக் காரணமாக வைத்து தன் வெறுப்பை உமிழ்ந்து விட்டார். அவருக்கு என்னை எப்படியாவது ஒழித்துக் கட்ட வேண்டும். நடந்ததற்கு நீ எவ்வகையிலும் காரணமாக மாட்டாய்... விட்டுத்தள்ளு.


அன்றிரவு நிறைய சிந்தனை செய்தார் ஸ்டீல். மறுநாள் காலை பதினோரு மணிக்கு சுமாருக்கு ஃபாலே ஸ்கொயரில் இருந்த குறிப்பிட்ட ஒரு அபார்ட்மெண்ட்டுக்குச் சென்றார். காலிங் பெல்லை அடித்தார்... கதவை தட்டினார். மறுமொழி ஏதும் இல்லாமல்போகவே பையிலிருந்த சாவிக் கொத்தை வெளியில் எடுத்தார்.
உள்ளே யாரும் இல்லை என்பது என் அதிர்ஷ்டம்.
அத்துமீறி உள்ளே நுழைகிறோம்;அது சட்டவிரோதம் என்கிற உண்மை அவர் அறியாததல்ல. தீவிர ஆராய்ச்சியில் இறங்கிய அவருடைய பார்வையில் அகப்பட்ட முதல் தடயம் பெண்கள் அணியும் நைலான் காலுறைகள்.
படுமோசமாக இழுக்கப்பட்டதால் உருவமிழந்து போயிருக்கிறது.. இதைத்தான் முகத்தைப் போர்த்த கொலைகாரன் பயன்படுத்தியிருக்கக்கூடும்.
அங்கிருந்த ஒரு அலமாரியில் சிவப்பு நிற பெயிண்ட் டப்பா அகப்பட்டது.
சிவப்பு நிற சாவி கடையில் கிடைக்காதுதான்... எனவே சாவிகளுக்கு இவனே சாயம் பூசியிருக்கிறான்.

அடுத்து அவர் கண்டுபிடித்த பொருள்தான் குற்றவாளியை இனம் காட்ட ஆதாரமானது. மற்ற பாட்டில்களுக்குப் பின்னால் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது அது. அந்த பாட்டிலை திறந்து லேசாக முகர்ந்து பார்த்தார்... அதை அடையாளம் கண்டு கொள்வதில் அவருக்கு எந்த சிரமமும் இருக்கவில்லை.




கொலையாளி யார் என்பதை ஸ்டீல் ஏறத்தாழ சரியாக யூகம் செய்துவிட்டார்... இன்னும் ஒன்றிரண்டு கேள்விகளுக்கே பதில் தெரிய வேண்டும். டெலிபோனை தேடிப்பிடித்து டேவுக்கு போன் செய்தார்




அந்த அபார்ட்மெண்டின் சொந்தக்காரன் எந்த நிமிடமும் அங்கே வந்து சேருவான் என்பதை ஸ்டீல் எதிர்பார்க்காமல் இல்லை— வாசலுக்கு நேராக நாற்காலி ஒன்றைப்போட்டு அமர்ந்து கொண்டவர் கையில் தன் துப்பாக்கியை தயார் நிலையில் பிடித்திருந்தார். சில நிமிடங்களுக்குப்பின் காலடியோசை வெளியே கேட்டது... அடுத்து வெளி கதவில் சாவியை நுழைக்கும் ஓசை... அதைத் தொடர்ந்து அந்த அறைக்கதவு திறந்து கொண்டது.




கதவை சாத்திவிட்டு அதன்மீது சாய்ந்து நின்றான் வெர்னான் வெர்னான்.
இப்போது சொல்லுங்கள்
ஆட்டம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது! சிவப்பு சாவி' கொலைகாரன் நீதான என்பதை நான் தெரிந்து கொண்டு விட்டேன். மயக்க மருந்து, சிவப்பு சாயம், முகத்திரை - உன் தளவாடங்கள் அனைத்தையும் இங்கே பார்த்து விட்டேன்.
நிறுத்தி நிதானமாக ஆனால் படு அழுத்தமாக வார்த்தைகளை வெளியிட்டார் ஸ்டீல்.
உன்னுடைய க்ரைம் நாவல்களில் உயிர் இல்லை, உன் எழுத்துக்கள் செல்லாக் காசாகி விட்டன என்று பதிப்பாளர்கள் உதாசீனம் செய்ததை பொறுக்கமாட்டாமல் கற்பனையாக எழுதுவதை விடுத்து நடைமுறையில் செய்து காட்டத் துணிந்து விட்டாய்... இல்லையா?
இல்லை என்பதாக ஆவேசமாக மறுதலித்த வெர்னானின் குரல் நடுங்கியது.
ஸ்டீல்... உங்களுக்கென்ன மறை கழன்று விட்டதா? நான் எப்படி கொலைகாரனாக இருக்க முடியும்? கனோலி கொலை செய்யப்பட்ட போது நான் உங்களோடு தானே இருந்தேன்!
அந்த ஒரு கொலையை நீ செய்யவில்லை தான்! கனோலியை சுட்டுக் கொன்றவர் ஸ்ட்ராட்டன்.... தன் மீது பழி விழுவதை தவிர்க்க அதுவும் தொடர் கொலைகளில் ஒன்று என்று மற்றவர்கள் நினைக்க - அங்கே ஒரு சிவப்பு சாவியை விட்டுப் போயிருக்கிறார்.


திடீரென்று வெர்னானின் கண்களில் கொலை வெறி தாண்டவமாடியது...தன் பையிலிருந்த சிறிய ரிவால்வரை வெளியில் எடுத்தான்.
துப்பாக்கியை நீ நீட்டினாலும் என்னைச் சுடும் தைரியம் உனக்கு கிடையாது ஸ்டீல்... நீ ஒரு போலீஸ் அதிகாரி இல்லை... வெளிநாட்டு ஆசாமி... என்மீது பழி போட்டு நான் வெளியேற முடியாத நிர்ப்பந்தத்தை நீ ஏற்படுத்தினால் என் துப்பாக்கியை நான் உனக்கு எதிராக பிரயோகிக்கும் உரிமை எனக்கு உண்டு.
அவன் கூற்றில் உள்ள உண்மை ஸ்டீலுக்குப் புரியாமலில்லை... அவர் முதலில் துப்பாக்கியை முழக்கினால் பழி அவர் மீது சாடும்... கதவை திறக்க கையை
பின்னோக்கி கொண்டு சென்று குமிழை தேடி அது அகப்படாமல் போகவே, ஸ்டீல் மீது இருந்த பார்வையை ஒரு கணம் விலக்கி பின்னுக்கு நோக்கினான் வெர்னான். அதுதான் தருணம் என்று அவன் மீது பாய்ந்தார் ஸ்டீல். துப்பாக்கி தோட்டாவை உமிழ்ந்தது.
டுமீல்
தோட்டா குறி தவறிப் போன போதிலும் ஸ்டீல் நிலைகுலைந்து விழுந்து விட்டார். வெர்னான் ஓட்டம் பிடித்தான்.


மறுகணம் துள்ளிக் குதித்தெழுந்த ஸ்டீல் அவனை விரட்டிக் கொண்டு ஓடினார்.
அவர் படிக்கட்டுகளில் பாய்ந்து இறங்கிய வேளையில் பயல் தலை வாசலை கடந்து விட்டான்.


ஸ்டீல் வெளியே வந்தபோது காரைக் கிளப்பிக் கொண்டு அங்கிருந்து நகரத் தொடங்கிவிட்டான்... அப்போது போலீஸ் கார் சைரன் ஒன்று ஒலிக்க அங்கே வந்து சேர்ந்தது.
ஊ ஊ ஊ ஊ!


யூனிபார்மில் இருந்த ஒரு போலீஸ் அதிகாரி அருகில் இருக்க டேவ் தான் காரை ஓட்டி வந்தான். ஸ்டீலை நெருங்கியதும் கார் கிறீச்சிட்டு நின்றது.
அந்தக் காரில் தப்பியோடுகிறான் வெர்னான்... கொலைவெறியோடு! கையில் ஒரு துப்பாக்கியும் வைத்திருக்கிறான்... 'சிவப்பு சாவி' கொலைகளை செய்தவன் அவன்தான்.
சரி... ஏறி உட்கார்... அவனை மடக்கிப் பிடித்து விடலாம்.


அதைத் தொடர்ந்து பந்தயத்திடலில் ஓடும் கார்களைப் போல் அவ்விரு கார்களும் சாலையில் சீறிக்கொண்டு ஓடின. டேவின் அருகே இருந்த போலீஸ் அதிகாரி ரேடியோவில் தொடர்ந்து செய்தியனுப்பிக் கொண்டிருந்தார்.
கறுப்பு நிற சொகுசுக் கார்... எண் 1955... இரண்டாவது அவென்யூவில் தென்திசை நோக்கி போய்க் கொண்டிருக்கிறது...
ப்ரூக்லின் பாலத்தை நோக்கி போகிறான் போலும். அவன் ஒரு கொலைகாரன்... துப்பாக்கி வைத்திருக்கிறான்... அனைத்து கார்களுக்கும் தகவல் கொடுங்கள்.
அவர்கள் யூகித்த மாதிரியே ஆசாமி ப்ரூக்லின் பாலத்துக்குத்தான் போய்க் கொண்டிருந்தான்.... சாகஸமாக காரை உச்ச வேகத்தில் செலுத்திச் சென்ற டேவ் இடைவெளியை கணிசமாக குறைத்து விட்டான்.
ஓ.கே. ஜான் நீ சொல்கிற மாதிரி இவன்தான் கொலைகாரன் என்று வைத்துக் கொண்டால்
அவன் இந்தக் கொலைகளை செய்யக் காரணம் என்ன? உன்னையும் அவன் கொல்ல முயன்றானே - ஏன்?
ஹெப்ளரும், பார்க்மேனும் பத்திரிகை துறையில் இருப்பவர்கள்... சமீப காலங்களில் அவனுடைய படைப்புகளை நிராகரித்தவர்கள், ஸ்ட்ராட்டன் ஒரு முறை அவனை பொது இடத்தில் வைத்து
அவமானப்படுத்தி இருக்கிறார்... என்னை தன் கூட்டாளியாக்கி பின்னர் கொலைப்பட்டியலில் என்னையும் கொண்டு வர அவன் விரும்பியது 'த்ரில்'லுக்காக இருக்கலாம். அவனைப் பொறுத்த மட்டில் யாரை, எதற்காக கொலை செய்ய வேண்டும் என்கிற கேள்வி எதுவுமே கிடையாது... உண்மைக் கதையில் வரும் கதாபாத்திரங்களை அவன் தேர்ந்தெடுத்திருக்கிறான்!


மனித உயிர்களைப் பற்றி அக்கறைப்படாத வெர்னான் அசுரகதியில் காரை செலுத்திப் போய்க் கொண்டிருந்தான்.
அடேய்... கிறுக்குப் பயலே - உன்னை யாருடா வெளியில் விட்டது?


திடீரென்று டேவ் எரிச்சலோடு கத்தினான்.
அவன் ட்ரீம்லாண்ட் அல்லது லூனா பார்க் சென்றடையும் நோக்கத்தோடு விரைகிறான்... கூட்டத்தினுள் புகுந்து விட்டான் என்றால் அப்புறம் அவனை கண்டுபிடிப்பது கஷ்டமாகிவிடும்.


லூனா பார்க்கின் முன்னால் காரை நிறுத்திய வெர்னான் குதித்து வெளியேறி ஜனங்கள் நிறைந்த பகுதியை நோக்கி ஓட்டம் பிடித்தான்.
அதோ ஓடுகிறான்.


அதைத் தொடர்ந்து அவர்களும் காரை விட்டிறங்கி போலீஸ் அடையாள முத்திரையை காட்டி உள்ளே நுழைந்தனர்.
நாங்கள் காவல்துறையை சேர்ந்தவர்கள்.
அதற்குள் கூட்டத்தினரோடு கலந்து விட்டிருந்தான்.
இனி, வைக்கோல் போரில் ஊசியை தேடிய கதைதான். நாம் பிரிந்து வெவ்வேறு திசையில் தேடுவோம்...
எப்படியும் தேடிக் கண்டுபிடித்து விடலாம் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.
எனக்கு இல்லை... நியூயார்க் பரந்த இடம்... காற்றில் கரைந்த மாதிரி மிக சுலபமாக காணாமல் போய்விடலாம்.
கூட்டத்தினூடே புகுந்து தீவிர வேட்டையில் இறங்கிய ஸ்டீல், பல நிமிடங்களுக்குப் பிறகு குத்துச் சண்டை மேடை அருகே நின்றிருந்த ஆசாமியின் மீது கவனம் செலுத்தலானார். கறுப்பு கண்ணாடியணிந்திருந்த அந்த ஆசாமி முகத்தை மறைக்க மலிவான ஸ்ட்ரா தொப்பியையும் மாட்டிக் கொண்டிருந்தான்.. கால் கட்டை விரலால் தரையில் கோலமிட்டுக் கொண்டிருந்தது தான் ஸ்டீல் அவன் மீது அக்கறை கொள்ளச் செய்தது.
அது அவன்தான்... துளி சந்தேகமும் இல்லை.


அவனை நோக்கி அவர் விரைந்து நெருங்கிய போது வெர்னான் அவரை கவனித்து விட்டான்.
அதோ ஓடுகிறவனை பிடியுங்கள்... அவன் ஒரு கொலைகாரன்-
முறையாக வாசல் வழியாக நுழைய அவகாசமில்லை.
ஹே... இது என்ன போக்கிரித்தனம்?
தலை போகிற அவசரம்... கோபித்துக் கொள்ளாதே அப்பனே.
இந்த உல்லாச ரயில் நகரத் தொடங்கிய வேளையில் மின்னல் வேகத்தில் பாய்ந்து அதன் கடைசிப் பெட்டியில் தொற்றிக் கொண்டார் ஸ்டீல்.



நாலைந்து பெட்டிகள் தள்ளி பதுங்கிக் கிடந்த வெர்னான் சட்டென்று எழுந்து ஸ்டீலை குறிவைத்து துப்பாக்கியை நீட்டினான்.
துப்பாக்கியை முழக்கிவிடாதேடா முட்டாள்... அப்பாவி ஜனங்கள் மீது தோட்டா பாய்ந்துவிடப் போகிறது! எப்படியும் நீ தப்ப முடியாது... சரணடைந்து விடு
அதையும் தான் பார்க்கலாம்.
ஸ்டீலை நோக்கிச் சுட்டான். ஆனால் அந்த ரயில் அப்போதுதான் ஒரு மேட்டில் ஏறி இறங்கியதால் தோட்டா திசை மாறிப் போய்விட்டது.
டுமீல்!
அந்த ரயில் இன்னொரு மேட்டில் ஏறிய போது ஸ்டீலுக்கு குறிவைக்க ஏதுவாகிவிட்டது.
க்ராக்!
அவனுடைய புஜத்தை குறி வைத்து சுட்டார் ஸ்டீல். முதல் தோட்டா குறி தப்பிவிட்டது... ஆனால் இரண்டாவது தோட்டா துப்பாக்கி பிடித்த கையை கச்சிதமாகத் தாக்கியது.
வெர்னானின் கையிலிருந்த துப்பாக்கி எகிறி எங்கோ போய் விழுந்து விட்டதால் தைரியமாக அவனை நோக்கி முன்னேறினார் ஸ்டீல்.


ப்யல் அசுர வெறியோடு போராடினான்... ஆனால் ஸ்டீலும் சளைக்கவில்லை...
இருவருக்குமிடையே நிகழ்ந்த கைகலப்பின் முடிவில் ஸ்டீல் இடியென வெர்னானின் தாடையில் விட்ட குத்து அவனை நிலைகுலையச் செய்து விட்டது.
ஆஆ....
கும்!
அடிபட்ட பறவை போல் அப்பால் போய் விழுந்தான் வெர்னான்...
அதையடுத்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த அவனை ஏற்றிக் கொண்டு ஆம்புலன்ஸ் ஒன்று விரைந்தது... ஆடிப் போயிருந்த ஸ்டீலின் புஜத்தை ஆதரவாகப் பற்றியது ஒரு கை...
மருத்துவமனை சென்றடையும் வரை கூட உயிர் உடலில் தங்காது என்று தோன்றுகிறது.


மன்ஹாட்டனை நோக்கி கார் சென்று கொண்டிருந்த வேளையில் -
வெர்னான் மீது உனக்கு சந்தேகம் விழுந்தது எப்படி?
ஸ்டராட்டன் கொலை செய்யப்பட்ட போது கொலைகாரன் உத்தேசமாக எங்கே சென்றிருப்பான் என்று கணித்து அந்த இடத்தை நான் ஆராய்ந்த போது தரையில் அரைவட்ட வடிவில் சில கோடுகளை கண்டேன். கால் கட்டை விரலால் கோலம் போடுவது போல் கோடுகளை
இழுப்பது வெர்னானின் தன்னிச்சையான பழக்கம். அந்த தடயம்தான் அவன்மீது என் பார்வை விழ காரணமாக அமைந்தது.
மறுநாள் செய்தித்தாள்களில் தலைப்பு செய்தியாக அந்த சம்பவம் வெளிவந்த போது ஸ்டீலின் பெயரோடு டேவின் பெயரும் இடம் பெற்றிருந்தது. இலண்டனுக்குத் திரும்ப, ஸ்டீல் விமான நிலையம் சென்ற போது, வழியனுப்ப டேவ் தம்பதியினர் வந்திருந்தனர்.
எனக்கு இப்போது சுக்கிர திசை என்று நினைக்கிறேன்.. 'சிவப்பு சாவி' தொடர் கொலைகள் விவகாரத்தில் எனக்கு பதவி உயர்வு கிடைத்திருக்கிறது... நான் காரை படு வேகமாக ஓட்டி ஒத்துழைத்தேன் என்பதை தவிர அந்த வழக்கில் முழு அளவில் சாதனை புரிந்தவன் நீதான்.
இதை எல்லாம் விட, இனிப்பான சேதி- என்னவென்றால் ஹாகனை எனக்கு இனி கொஞ்சமும் சம்பந்தம் இல்லாத 'பொதுமக்கள் தொடர்பு' பிரிவுக்கு மாற்றி விட்டார்கள்... மிக்க நன்றி ஜான்.
முற்றும்

முத்து காமிக்ஸ்

ஏஜெண்ட்
ஜான் ஸ்டீல்
தோன்றும்

# கறுப்பு வட்டம்!







டெலிபோனில் பெரும் பதட்டத்தோடு ஒலித்த குரலை அடையாளம் கண்டு கொள்வதில் இன்ஸ்பெக்டர் டேவிட்டுக்கு எந்தக் கஷ்டமும் இருக்கவில்லை.
யார்... சமார்ட்டா? யெஸ், என்ன விஷயம்... சொல்!
முக்கியமானதொரு துப்புக் கிடைத்திருக்கிறது ஸார். சற்று முன்னர் தான் டௌமியரின் இடத்தை விட்டு வெளியே வந்தேன்... இந்த இடமும் 'லாகேபைன்' என்ற நைட் கிளப்பும்;கறுப்பு வட்டத்தினர் வந்து போகும் மையங்கள என்பதாகத் தெரிகிறது. டௌமியருக்கு நேரடி பங்கு இருக்கிறதா என்று தெரியவில்லை. அடுத்து நான் 'லாகேபைனுக்கு' போவதாக இருக்கிறேன்...
அவன் மேலே தொடருமுன் ஏக காலத்தில் சீறிக் கொண்டு வந்த இரண்டு தோட்டாக்கள் அவனை தாக்கின... வெட்டுண்ட மரம் போல் சரிந்தான் சமார்ட்...
டுமீல்! டுமீல்!!
ஆ... ஆ... ஆ...



தோட்டாக்களின் முழக்கமும், சமார்ட்டின் அலறலும் மறுமுனையிலும் தெளிவாகக் கேட்டன...
சமார்ட்! என்ன ஆயிற்று உனக்கு? சமார்ட்...
ரிஸீவரை அதன் இடத்தில் வைத்துவிட்டு தன்னுடைய அஸிஸ்டெண்ட் ஜிம்மியின் பக்கம் திரும்பினார் டேவிட்
சமார்ட்டை யாரோ சுட்டுவிட்டார்கள்... காரைக் கிளப்பு!
யெஸ் ஸார்
அவர்கள் ரூ லாசைஸ் பகுதியை சென்றடைந்த போது இரண்டு போலீஸார் கூட்டத்தை கலைத்துக் கொண்டிருந்தனர்... நிலவரம் புரிந்துவிட்டது இன்ஸ்பெக்டருக்கு.
ஹ்ம்... நாம் செய்யக்கூடியது எதுவுமில்லை போலும்!


ஜிம்மி சமார்ட்டின் நெருங்கிய நண்பன்... பழி வாங்கும் வெறி அவன் முகத்தில் சட்டென்று படர்ந்தது....
பால்... உன் மரணத்துக்கு காரணமானவர்களை நான் நிச்சயம் பழி வாங்கியே தீருவேன்...!
மீண்டும் போலீஸ் தலைமையகத்துக்கு வந்து சேர்ந்த இன்ஸ்பெக்டர் டேவிட் தீவிர சிந்தனையிலாழ்ந்தார்...
நமக்கு ஒரு புதிய நபர் தேவை ஜிம்மி... நாம் நெடுநாளாக இங்கே இருப்பதால் அனைவருக்கும் நம்மைப் பற்றித் தெரியும்... நம்முடைய பழைய நண்பர் ஜான் ஸ்டீல் தான் பொருத்தமான ஆள் என்று நான் நினைக்கிறேன்...
அன்று தாமதமாக தன் ஹோட்டல் அறைக்கு ஜான் ஸ்டீல் திரும்பி வந்து சேர்ந்த போது-
மிஸ்டர் ஸ்டீல்... மார்ஸெல் லஸிலிருந்து இன்ஸ்பெக்டர் டேவிட் போன் செய்தார்... உடனடியாக அவருக்கு நீங்கள் போன் பண்ண வேண்டுமாம்... விவகாரம் அதிமுக்கியத்துவம் வாய்ந்தது - அவசரமும்கூட... என்று குறிப்பிட்டார்...
டேவிட?... ஆல்ரைட்... நான் என் அறையிலிருந்து அவருக்கு போன் பண்ணிக் கொள்கிறேன்.


உன்னுடைய உதவி தேவைப்படுகிறது ஸ்டீல்... ஒரு இரகசிய சமூகவிரோத கும்பல் பற்றிய விவகாரம்_ டெலிபோனில் விபரங்களை பேசமுடியாது... உடனே காரில் புறப்பட்டு மார்செய்ல்ஸ் வா... ஒரு கணமும் தாமதிக்க முடியாது_
ஓ.கே... வருகிறேன்


ஜான் ஸ்டீலுக்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் இன்ஸ்பெக்டர் டேவிட் பக்க பலமாக நின்று உதவியிருக்கிறார். அவருக்கு முடியாது என்று சொல்ல முடியாதுதான்... உடனே காரில் புறப்பட்டார்... விடியற்காலை ஏழுமணி அளவில் சந்திப்பு நிகழ்ந்தது... தன் பிரச்சனையை டேவிட் தெளிவாக எடுத்துரைத்தார்.
'கறுப்பு வட்டம் என்று' அந்தக் கும்பலுக்குப் பெயர்... குற்றவாளிகளை நாட்டுக்கு வெளியே கடத்திப் போவது, வேறு பலரை கடத்தி நாட்டுக்குள் கொண்டு வருவது போன்ற காரியங்களை செய்து சம்பாதிக்கிறார்கள்.


அவர்களுடைய தலைவன் 'மிஸ்டர் டைரக்டர்' என்று அழைக்கப்படுகிறான்_ அவன் மட்டும் யார் என்று தெரிந்து விட்டால் அந்தக் கும்பலையே வேரோடு களைந்து விடலாம்.
உங்களுடைய அதிகாரிகள் பலர் இருக்க இந்தப் பணியை நீங்கள் என்னிடம் விடுவானேன்?


'கறுப்பு வட்டம்' கும்பலுக்கு இங்கேயுள்ள போலீஸ் அதிகாரிகள் அத்தனை பேரையும் அடையாளம் தெரியும்_ நீ - அந்நியன்!
ஆனால் நான் மார்ஸெய்ல்ஸில் தங்க முடியாதே.. இங்கிலாந்தில் ஒரு அவசர வேலை எனக்காக காத்துக் கொண்டிருக்கிறது. இன்றிரவே நான் ஊர் திரும்ப வேண்டிய நெருக்கடி_ ஸாரி.
டேவிட்டின் முகத்தில் ஏமாற்றம் பரவியது. மறுபடியும் ஸ்டீலிடம் பேசிப் பார்த்தார்_ ஸ்டீல் மசியவில்லை_ அப்போது ஜிம்மி குறுக்கிட்டுப் பேசலானான்.
மிஸ்டர் ஸ்டீல்.. நீங்கள் என்னோடு வாருங்கள் நான் காட்டுவதை பார்த்தீர்களேயானால் நிச்சயம் நீங்கள் மனம் மாறி சம்மதிப்பீர்கள்.. அதற்கு அதிக நேரம் பிடிக்காது_
ஓ.கே..
ஒரு போலீஸ் காரில் கிளம்பினார்கள். சிறு பயணத்தின் முடிவில் ஒரு சவக்கிடங்கின் முன் போய் நின்றது கார்_
ஹே.. என்னது - இங்கே அழைத்து வந்திருக்கிறீர்கள்?


உள்ளே - அங்கிருந்த உதவியாளர் ஸ்டீலுக்கு காட்டிய சடலத்தை பார்த்த மாத்திரத்தில் அதிர்ந்து போனார்_
பால்..! பால் சமார்ட்!
யெஸ்_ மிஸ்டர் - உங்களோடு நீண்ட காலம் சேர்ந்து பணியாற்றிய நல்ல நண்பர்_ உங்களைப் பற்றி பெருமையாக நிறைய சொல்லியிருக்கிறார்.
அவர்கள் வெளியேறி வந்ததும் ஜிம்மி மீண்டும் உதவி கேட்டு வலியுறுத்தினான்.
கறுப்பு வட்டத்தினர் ஒரு தெரு நாயை சுடுவது போல் மோசமான முறையில் அவரை கொன்றிருக்கிறார்கள். அந்தக் கொலைகாரர்களை கண்டுபிடிக்கத்தான் உங்களுடைய உதவியை நாங்கள் கோருகிறோம்.
நாஜிகளின் ஆக்கிரமிப்பின் போது தானும் பாலும் சகோதரர்களைப் போல் பாச நேசத்தோடு ஒன்றாக இணைந்து செயல்பட்ட கால கட்டத்தை நினைவு கூர்ந்தார் ஸ்டீல். ஒருவருடைய உயிரை மற்றவர் காப்பாற்றிய சந்தர்ப்பங்கள் பல உண்டு_
ஓ.கே. நீங்கள் ஜெயித்து விட்டீர்கள்.
எனக்குத் தெரியும்_ நீங்கள் நிச்சயம் சம்மதிப்பீர்கள் என்று.


போலீஸ் தலைமையகத்துக்கு அருகிலிருந்த ஒரு லாட்ஜில் அறை எடுத்துக் கொண்டு, இன்ஸ்பெக்டரிடம் வழக்கு சம்பந்தப்பட்ட விபரங்கள் அனைத்தையும் கேட்டுத் தெரிந்து கொண்ட பின்னர் இரண்டாம் நாள் இரவு டௌமியரின் பாருக்குப் போனார்.
பால் இந்த இடத்தைவிட்டு வெளியேறிய சற்றைக்கெல்லாம் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறான்... அவனுடைய கூற்றின்படி, சமூக விரோத கும்பல் வந்து போகும் இடங்களில் இதுவும் ஒன்று... எனவே, புலனாய்வை இங்கே தொடங்குவது தான் சரியாக இருக்கும்...
உள்ளே சென்ற ஸ்டீல் மூலையிலிருந்த ஒரு மேஜையில் அமர்ந்து நிதானமாக குடித்துக் கொண்டே செய்திதாளில் பார்வையை ஓட்டினார்... பின்னர், வெயிட்டரிடம் காஷுவலாக ஒரு கேள்வியை கேட்டார்..
இரண்டு மூன்று தினங்களுக்கு முன், எதிர்வரிசையில் ஒரு நபர் சுட்டுக் கொல்லப்பட்டதாக கேள்விப் பட்டேன்...!
ஆமாம்... ஸார்!
ஒரு இருபது ப்ராங்க் நோட்டை எடுத்து வெயிட்டரின் கையில் திணித்தார் ஸ்டீல்...
வெயிட்டர்!...
அதைப்பற்றி கொஞ்சம் விபரமாக சொல்லேன். நான் ஒரு கிரைம் ரிப்போர்ட்டர்... சுவாரஸ்யமான சங்கதிகளுக்கு தாராளமாக பணம் தருவேன்.
சொல்ல நிறைய விபரங்கள் கிடையாது ஸார். துப்பாக்கி முழக்கம் கேட்டு, வெளியே ஓடிப் போய் பார்த்தேன். இரண்டு ஆசாமிகள் தங்களுடைய காரை நோக்கி ஓடுவதைக் கண்டேன்...



உரத்துக் குரல் கொடுத்து வெயிட்டரை மேலே பேசவிடாமல் தடுத்த அந்த நபர்தான் டௌமியராக இருக்கக்கூடும் என்று ஸ்டீல் யூகித்துக் கொண்டார். வெயிட்டர் உடனே தன் பாஸிடம் ஓடினான்.
முட்டாள்… அறிவு கெட்ட முண்டம்.. அந்நியர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் எதுவும் சொல்லாதே என்று நான் உன்னை எத்தனை முறை எச்சரித்திருக்கிறேன்.
பின்னர் எழுந்து வந்த கடை முதலாளி ஸ்டீலை வெறிக்கப் பார்த்தார். அடுத்து அவர் பேசிய போது குரல் உணர்ச்சியற்றுப் போயிருந்தது.
எதற்காக கேள்விகள் எல்லாம் கேட்கிறீர்கள் மிஸ்டர்? இது ஒரு கௌரவமான இடம். அன்று நடந்த துப்பாக்கிச் சூட்டிற்கும் எங்களுக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது.
கெட்ட நோக்கத்தோடு நான் கேட்கவில்லை… நான் ஒரு கிரைம் ரிப்போர்ட்டர். பத்திரிகையில் பிரசுரிக்க தகவல் சேகரிக்க வந்தேன்.
தப்பான இடத்திற்கு வந்திருக்கிறீர்கள் மிஸ்டர்… நாங்கள் உண்டு எங்களுடைய தொழில் உண்டு என்றிருக்கிறோம்… குடிக்க வேறு ஏதாவது தரட்டுமா?
நோ… தாங்க்ஸ்!


சில நிமிடங்கள் கழித்து வெளியேறி நடக்கத் தொடங்கிய ஸ்டீல் தன்னை யாரோ கண் காணிப்பதாக உணர்ந்தார்.
Potage 40


தன்னைப்பற்றி டௌமியரின் மனதில் கிலேசம் ஏற்பட்டிருப்பது தெளிவாகப் புரிந்தது ஸ்டீலுக்கு– டௌமியருக்கு இந்தக் கொலையில் நேரடி பங்கு உண்டா? - தெரியவில்லை! தன்னை விடாது யாரோ பின் தொடர்வதை உணர்ந்தார்.
அவர்களாக நடவடிக்கையில் இறங்கும் வரை நான் எதுவும் செய்யப் போவதில்லை... அவர்களை தெரிந்து கொள்ள - புரிந்து கொள்ள இதுதான் சரியான யுக்தி.


தன்னை தாக்குவது அவர்களுடைய நோக்கமாக இருந்தால் பின்னாலிருந்து தான் வருவார்கள் என்ற அவர் போட்ட கணக்கு தப்பாகிப் போனது– பக்கவாட்டிலிருந்த சந்துக்குள்ளிருந்து சில முரடர்கள் புயல் வேகத்தில் அவர் மீது பாய்ந்தனர். ஆனாலும் சரேலென விலகி அதிரடியாக எதிர் தாக்குதல் நடத்தினார்.
எனக்கு முன் வெளியேறிப் போய் பதுங்கிக் கிடந்திருப்பார்கள் போலும்.
கும்!


பின்னாலிருந்து ஒருவன் கைத்தடியால் அவர் மண்டையில் பலமாக அடிக்க பொறிகலங்கிப் போனார்....
மடேர்!
அஹ..
செய்வதறியாது நிலைகுலைந்து விழுந்து கிடந்த நிலையிலும், தான் முரண்டு பிடித்தால் நிச்சயம் கொன்று போட்டுவிடுவார்கள் என்கிற மட்டிலும் அவரால் தீர்மானிக்க முடிந்தது... எனவே, உயிரற்ற சடலம் போல் எவ்வித சலனமும் இன்றிக் கிடந்தார். அருகில் கிடந்த கற்களை எடுத்து வந்து அவருடைய பைகளில் போட்டு நிரப்பினர்...
இது போதும்.... பிணம் மேலே நீர்மட்டத்துக்கு வராமல் தடுக்க! சடலத்தை பிறர் கண்டு பிடிப்பதற்குள் நாலைந்து தினங்களாவது ஓடிப் போகும்...
சீக்கிரம் நடக்கட்டும்!
படகுகள் வந்து போகும் பகுதிக்கு அவரை தூக்கிச் சென்று தண்ணீருக்குள் போட்டனர்...
தொப்!
ஸ்டீல் தம் பிடித்தவாறு தன் மேலாடையை களைய பிரயத்தனம் மேற்கொண்டார்.


நெஞ்சு வெடித்துவிடும் என்கிற மாதிரியான நெருக்கடி வந்துவிட்ட கணத்தில் தெய்வாதீனமாக நீர் மட்டத்திற்கு வந்துவிட்டார்... மறுபடியும் மூழ்கி உள்ளுக்குள்ளேயே நீந்திச் சென்று அவர் பின்னர் தலை தூக்கிய இடம் ஒரு பெரிய படகின் பின்புறம்...
என்னை தண்ணீருக்குள் தூக்கிப் போட்ட முரடர்கள் நான் செத்து விட்டதாக நம்பிக் கொண்டிருப்பார்கள்.... அது எனக்கு சாதகமான அம்சம்.
MARION WELLFLEET


பிறருடைய பார்வையில் பட்டுவிடாமலிருக்க பின்புற சந்துகளின் வழியே நடந்த ஸ்டீல் முடிவில் ஒரு டாக்ஸியை பிடித்து போலீஸ் தலைமையகத்தை சென்றடைந்த பின்னரும் உடையிலிருந்து நீர் சொட்டிக் கொண்டிருந்தது... நடந்த விபரங்களை எடுத்துரைத்தார். அதைக் கேட்டு ஜிம்மி கொதிப்படைந்தான்.
நிச்சயம் டௌமியருக்கு இதில் சம்பந்தம் இருக்கும். பிடித்து வந்து உதைத்தால் உண்மையை கக்கிவிடுவான்,
பதறாதே ஜிம்மி.... நேரடி நடவடிக்கை மேற்கொள்வது உசிதமாக இராது... தந்திரமாக செயல்பட வேண்டும்
சரியாக சொன்னீர்கள் இன்ஸ்பெக்டர்... என்னிடம் ஒரு திட்டம் உண்டு... ஆனால் அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பு எனக்குத் தேவை.


ஸ்டீல் தன்னுடைய திட்டத்தை விவரித்துக் கொண்டிருந்த வேளையில் ஓசைப்படாமல் இருக்கையை விட்டு எழுந்த டேவிட் பூனை போல் நடந்து போய் சரேலென்று அறைக் கதவை திறந்தார். மறுபக்கம் – அதிர்ந்து போய் நின்ற முரட்டு உருவம் வேறு யாருமல்ல... அவர் கீழ் பணிபுரியும் ஓர் அதிகாரியே!
அலெக்ஸ்! இங்கே நீ என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய்?
ஸாரி ஸார்! சொந்த விஷயம் ஒன்றை உங்களிடம் பேசிப் போக வந்தேன். உள்ளே நீங்கள் உரையாடிக் கொண்டிருப்பது கேட்டது... தயங்கி நின்றேன்.


அறைக் கதவை தாழிட்டு விட்டு அலெக்ஸை வராந்தா பக்கம் தள்ளிக் கொண்டு போனார் இன்ஸ்பெக்டர்.
சொந்த விஷயமாக என்று குறிப்பிட்டாய்.. அப்படி என்ன விஷயம் - சொல்!
பாஸ்! இந்த 'கறுப்பு வட்டம்' விவகாரத்தை நீங்கள் ஜிம்மியிடம் ஒப்படைத்திருக்கிறீர்கள்.. வெளியிலிருந்து வந்த இங்கிலீஷ்காரரையும் இணைத்திருக்கிறீர்கள்.. ஆனால் ஜிம்மியை விட சீனியரான நானோ சில்லறை வழக்குகளோடும், அலுப்பூட்டும் விசாரணைகளோடும் அல்லாடிக் கொண்டிருக்கிறேன்.
உன்னை அலட்சியப்படுத்துகிறேன் என்கிற எண்ணமே உனக்கு வரக்கூடாது அலெக்ஸ் திறமையான அதிகாரிகளில் நீ ஒருவன் என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது. ஆனால் இது உன் வழிமுறைக்கு ஒத்துவராத ஒரு விவகாரம்.. பின்னர் ஒரு கட்டத்தில் நீயும் இதில் பங்கேற்க வேண்டி வரும். அதுவரை நீ பொறுமையாக இருக்க வேண்டும்... புரிந்ததா!
இதைச் சொல்லிவிட்டு இன்ஸ்பெக்டர் மீண்டும் அறைக்குள் நுழைந்த வேளையில் இகழ்ச்சியாக சிரித்தான் அலெக்ஸ்...
எனக்கு சாமர்த்தியம் போதாது என்று தான் இன்னமும் நினைத்துக் கொண்டிருக்கிறார்.


ஆறு தினங்களுக்குப் பின் - இரவு வேளையில் லா கேபைன் நைட் கிளப்பில் அமர்ந்திருந்தார் ஜான் ஸ்டீல்.. தடிமனான பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடி... அரும்பு மீசை.. ஈறுகளுக்கும் கன்னங்களுக்குமிடையே பஞ்சுப் பட்டையை திணித்திருந்ததால் உப்பலாகிப் போன முகத் தோற்றம் - ஆக மொத்தத்தில் அவரை சில தினங்களுக்கு முன் அடித்து தண்ணீருக்குள் தூக்கிப்போட்ட
போக்கிரிகள்கூட அடையாளம் கண்டு கொள்ள முடியாத அளவுக்கு மாறிப் போயிருந்தது அவருடைய முகத் தோற்றம்..
ஸார்.. சிகரட்?
நோ.. தாங்க்ஸ்!


சற்றைக்கெல்லாம் போலீஸ் என்பதற்கான சீருடை மற்றும் சில அடையாளங்களோடு அங்கே நுழைந்த இரண்டு நபர்கள் நேரே ஸ்டீலிடம் வந்தனர்..
எக்ஸ்கியூஸ் மீ ஸார் - நாங்கள் போலீஸ் அதிகாரிகள். நியூ மார்ட்டினியில் நேற்று நடந்த கொள்ளை சம்பந்தமாக உங்களை விசாரிக்க வந்திருக்கிறோம்.
போலீஸ்காரர்கள்!
என்னையா? உங்களுக்கென்ன புத்தி மாறாட்டமா? ஏதோ குளறுபடி நடந்திருக்கிறது!


அவர்கள் நினைக்கிற ஆள் நான் இல்லை என்று முரண்டிய ஸ்டீல் முடிவில் அவர்களோடு செல்ல சம்மதித்தார்.. அப்போது நைட் கிளப்பின் உரிமையாளரான மேடம் கிளேர் கோபாவேசமாக அங்கே பிரசன்னமானார்.
என்ன கலாட்டா இங்கே?
ஸாரி மேடம்.. இது போலீஸ் விவகாரம்


போலீஸ்காரர்களின் கவனம் திசை திரும்பியிருக்கும் அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு சட்டென்று தன் ரிவால்வரை வெளியில் எடுத்தார் ஸ்டீல்.
விலகி நில்லுங்கள் - நெருங்காதீர்கள்!


துப்பாக்கியை நீட்டி அச்சுறுத்தியவாறே பின்னோக்கி நகர்ந்து ஸ்டீல் வெளியேறிய போது போலீஸாரும் அவரை மடக்கும் முயற்சியாக தொடர்ந்து முன்னேறி வந்து கொண்டேயிருந்தார்கள். ஒரு கட்டத்தில் ஸ்டீலின் துப்பாக்கி ஒரு தோட்டாவை உமிழ ஒரு போலீஸ் அதிகாரி அலறலுடன் நிலை தடுமாறி கீழே சரிந்தார்.
டுமீல்!


அதுதான் வாய்ப்பு என்று அருகாமையில் நிறுத்தப்பட்டிருந்த கார்களில் ஒன்றை திறந்து அதில் ஏறி அமர்ந்தார் ஸ்டீல்_


சக்கரங்கள் கிறீச்சிட வேகம் எடுத்து ஓடத் தொடங்கியது அந்தக் கார்.
அந்தக் காரை போக விடாதீர்கள் - தடுத்து நிறுத்துங்கள்
விர்ர்ரூம்ம்!...
அந்தச் சம்பவம் ஒரு பரபரப்பை ஏற்படுத்திவிட மறுநாள் பேப்பரில் முதல் பக்கத்தில் செய்தியாக வெளியானது...
போலீஸை சுட்ட அந்த இங்கிலீஷ்காரனை இன்னமும் பிடிக்கவில்லையாம்...
ஆனால் அந்த நபரின் அங்க அடையாளங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.
இதற்கிடையே போலீஸ் தலைமையகத்தில் இன்ஸ்பெக்டர் டேவிட் சில உத்தரவுகள் கொடுத்துக் கொண்டிருந்தார்....
போலீஸாரை சுட்டுவிட்டு ஓடிப்போன அந்த ஆசாமியை தேடிக் கண்டுபிடிப்பதில் தீவிரம் காட்டு. சமூக விரோதிகள் வந்து போகும் மதுபானக் கடைகள் நைட் கிளப்புகள் என்று ஒன்றுவிடாமல் போ...
டௌமியரின் இடத்தையும் விட்டு விடாதே... 'சுடப்பட்ட' நம் அதிகாரி தன் பங்கு நாடகத்தை சரியாக நிறைவேற்றிக் கொடுத்து விட்டார்... இனி, நீ உன்னுடைய பங்கை சரிவர செய்ய வேண்டும்...
கச்சிதமாக செய்து விடுவேன் ஸார்!


நடுநிசியையும் தாண்டிவிட்டது– போலீஸ்காரர் சுடப்பட்டு 24 மணி நேரத்திற்கும் மேலாகிவிட்ட அவ்வேளையில் இருட்டில் ஓர் உருவம் லா கேபனின் பக்கவாட்டு கதவை திறந்து கொண்டு உள்ளே பிரவேசித்தது–
உங்களுக்கு என்ன வேண்டும்? கடையை மூடுகிற நேரம் இது... ஸார்!
மேடம் க்ளைரை நான் தனியாக சந்தித்துப் பேசவேண்டும்– ரொம்ப முக்கியமான விஷயம்.


மேலும் சற்று நேரம் இருவரும் உரையாடினர். பின்னர் உள்ளே போன ஊழியர் அலுவல அறையிலிருந்த மேடம் க்ளைரிடம் ஒரு நபர் அவளை தேடி வந்திருப்பதை தெரிவித்தார்.
யார் அந்த ஆள்?
பெயரை சொல்லவில்லை மேடம்– முக்கியமான சங்கதி என்றும் நிறைய பணம் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் சொன்னார்–


பின்னர்– அந்த ஊழியர் வந்த நபரை மேடம் க்ளைரின் அறைக்குள் போக அனுமதித்தார்– உள்ளே வந்த நபரை பார்த்த மாத்திரத்தில் க்ளைரின் விழிகள் வியப்பால் விரிந்தன–
ஹே– நீயா? போலீஸ்காரரை சுட்டுவிட்டு ஓடிய ஆசாமி அல்லவா நீ..?
எனக்கு உங்களுடைய உதவி தேவைப்படுகிறது மேடம்.



ஆனால் இது ரொம்ப ஆபத்தான சங்கதியாயிற்றே. அந்த போலீஸ்காரர் செத்துத் தொலைத்தால் உன் மீது கொலைக்குற்றம் அல்லவா சுமத்தப்படும்!
மேடம்... நான் பதுங்கிக்கிடக்க ஒரு பாதுகாப்பான இடம் தேவை... சும்மா ஓசிக்கு இந்த உதவியை செய்யச் சொல்லவில்லை... இது போதுமா பாருங்கள்.
உன்னை நான் இங்கே ஒளித்து வைக்க முடியாது. ஆனால் எனக்கு வேண்டப்பட்ட ஒரு நபர் இருக்கிறார். அவர் உனக்கு உதவக்கூடும்... ஆனால் அதற்கு நிறைய பணம் செலவாகுமே...
என்னிடம் பணம் ஏகமாக இருக்கிறது!
ஸ்டீலை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு, வெளியே வாடிக்கையாளர்கள் பயன்படுத்தும் பொது டெலிபோனை எடுத்து க்ளேர் பேசலானாள்.
ஆமாம்... சும்மா இல்லை. நிறைய பணம் கிடைக்கும். பாங்க் கொள்ளையில் சுருட்டிய பணம் ஏகமாக ஆசாமியிடம் இருக்க வாய்ப்புண்டு.


திரும்பி அறைக்குள் வந்தவள் வியாபார தோரணையில் பேசலானாள்...
சரியாக இன்னும் ஒரு மணி நேரத்தில் ப்ருமெஸ் கட்டிடத்திற்குப் போ... டாபின் கார் ஒன்று இரண்டு ஆட்களோடு உன்னை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கும். டிரைவரிடம் ' பெயர் ஜியார்ஜெஸ்தானா?' என்று கேள். உன்னை ' இங்கிலீஷ்காரரா?'என்று கேட்பான். என் பெயரை சொல்... பண விவகாரத்தை அவனிடம் பேசிக் கொள்...
ரொம்ப தாங்க்ஸ் மேடம்!
குறிப்பிட்ட நேரம் நெருங்கியதும் க்ளைர் சொன்ன கட்டிடத்தை நோக்கி விரைந்தார் ஸ்டீல். அவருடைய சூழ்ச்சித் திட்டம் பலிக்கத் தொடங்கிவிட்டது... ஸ்டீல் போய் சந்திக்க விருக்கிற நபரை பொறுத்த மட்டில் இவர் போலீஸக்குப் பயந்து பதுங்கி ஓடும் ஒரு கிரிமினல்... அங்கிருப்பவர்கள் கறுப்பு வட்டத்தின் உறுப்பினர்களாக இருப்பது நிச்சயம்.
எந்த ஒரு சிறு பிழையும் நிகழ்ந்து விடலாகாது. திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட சூழ்ச்சி நாடகம் இது என்கிற சந்தேகம் அவர்களுக்கு வந்து விட்டால் என் கழுத்தை அறுத்துவிடுவார்கள்.
கிளைர் சொன்ன மாதிரியே ஒரு டாபின் கார் அங்கே நின்று கொண்டிருந்தது.
நீ - ஜியார் ஜெஸ் தானே?
நீங்கள் - இங்கிலீஷ்காரர்... மேடம் க்ளைருக்கு வேண்டப்பட்டவர் - சரிதானே?


ஏறி அமருமாறு ஜியார்ஜெஸ் ஜாடை செய்தான். பின்னர் மௌனமாக காரை செலுத்திக் கொண்டு போனான்... புறநகர் பகுதியிலிருந்த ஆள் அரவமற்ற ஓர் இலக்கில் வண்டி நின்றது. இரண்டு ஆசாமிகளும் கீழே இறங்கி ஸ்டீலையும் இறங்கச் செய்தனர்... ஜியார் ஜெஸின் சகா ஸ்டீலை சோதனை போட்டு, அவரிடமிருந்த ஆட்டோமேடிக் துப்பாக்கியை எடுத்துக் கொண்டான்.
இதெல்லாம் ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மிஸ்டர்... தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள்.
இலக்கை நாம் சென்றடைந்த பிறகு உங்களுக்குத் தேவையானவை அனைத்தும் வழங்கப்படும்.
ரொம்ப மரியாதையாகப் பேசினார்கள்... ஆனால் அதில் நரித்தனம் இழையோடியது.
பண விஷயத்தையும் இங்கேயே பேசி முடித்துக் கொள்வோம்... உடனடியாக நீங்கள் பத்தாயிரம் ப்ராங்க்குகள் ரொக்கமாகத் தரவேண்டும். அதாவது - முதல் தவணையாக!
புரிகிறது!
பணம் கைமாறியதும் . உடனிருந்த ஆசாமி ஸ்டீலின் கண்களை கட்டினான்...
இதுவும் தவிர்க்க முடியாத ஒரு முன்னேற்பாடு. உங்களை நாங்கள் எங்கே அழைத்துப் போகிறோம் என்று உங்களுக்குத் தெரியாமலிருப்பதுதான் நம் அனைவருக்குமே நல்லது.


அதையடுத்து இருளைக் கிழித்துக் கொண்டு அந்தக் கார் விரைந்தது— ஸ்டீலின் அனைத்து புலன்களும் கூர்மையாக எச்சரிக்கையோடு இருந்தன...
என்னை எங்கே அழைத்துப் போகிறார்கள்?


உப்பு இழைந்த ஈர வாடை ஸ்டீலின் நாசியை எட்டியது... எக்ஷுவரி ஆறு அருகில் இருக்கிறது என்று கணித்துக் கொண்டார் ஸ்டீல்... அப்போது திடீரென்று கார் கிறீச்சிட்டவாறு ஒரு வளைவில் திரும்பியது— அதையடுத்து குதிரைகளின் குளம்பொலிகளும், கனைப்பு ஓசையும் ஆரவாரமாகக் கேட்டது... இடம் ஏதுவென்று ஸ்டீல் புரிந்து கொண்டு விட்டார்.
கமார்குவை நெருங்கிவிட்டோம் போலும். காட்டுக் குதிரைகள் ஏராளமாக நடமாடித் திரியும் இடம்....


முன்னர் யுத்தம் நடந்த காலகட்டத்தில் ஸ்டீலும் பால் சமார்ட்டும் ஏறத்தாழ ஓராண்டு காலத்திற்கு இந்தப் பிராந்தியத்தில் சுற்றித் திரிந்திருக்கிறார்கள்.
இவர்களைக் காட்டிலும் இந்தப் பகுதி எனக்குத் தான் ரொம்பவும் அத்துபடி!


பயண முடிவில் கார் ஒரு கட்டிடத்தின் முகப்பில் போய் நின்றது... அவர் இறங்கிய பிறகு தான் கட்டை அகற்றினார்கள்.
என் பெயர் குவாஸ்க். எங்களுடைய மாளிகைக்கு வந்திருக்கும் உங்களுடைய வரவு நல்வரவாகுக... மிஸ்டர் - ?
ப்ரெண்ட்... ஹென்றி ப்ரெண்ட்!


பணிப்பெண் கொண்டு வந்த காப்பியை ஸ்டீல் பருகிக் கொண்டிருந்த வேளையில் அந்தக் கும்பலின் தலைவர் குவாஸ்க் தன் திட்டத்தை ஸ்டீலுக்கு விளக்கினார்.
இங்கிருந்து உங்களை ஒரு ஹெலிகாப்டர் ஒரு இரகசிய விமான தளத்துக்கு ஏற்றிச் செல்லும்... அங்கே தயாராக நிற்கும் ஒரு விமானத்தில் நீங்கள் டாஞ்சியர் போய்ச் சேருகிறீர்கள்... அனைத்து ஏற்பாடுகளையும் கச்சிதமாக செய்து வைத்திருக்கிறோம்.
குட்!


அடுத்து பணவிவகாரத்தையும் பேசி முடித்துவிடுவோம். நாங்கள் தரும் பெயரில் மார்செய்ல்ஸிலுள்ள ஒரு பாங்கில் பதினைந்தாயிரம் ப்ராங்க்குகளை நீங்கள் டெபாஸிட் செய்ய வேண்டும் ஹெலிகாப்டர் பயணத்திற்கு இரண்டு தினங்கள் முன்னதாக! 'கறுப்பு வட்டம்' தன் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையில் தீவிர கருத்துக் கொண்டிருப்பதால் நீங்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்து செயல்பட வேண்டும்!
ஓ.கே. ஏற்பாடு செய்துவிடுகிறேன்.



அடுத்த 24 மணி நேரத்திற்கு ஸ்டீல் தனித்து விடப்படவேயில்லை.. எப்போதும் இரண்டு தடியர்கள அவரோடு ஒட்டிக் கொண்டு அலைந்தார்கள்.
கெட்ட ஜாதிபயல்களாக இருக்கிறார்களே. டேவிட்டோடு தொடர்பு கொண்டு பேசலாம் என்றால் ஒரு வாய்ப்பு தரமாட்டார்கள் போலிருக்கிறதே.
அந்தக் கெடுபிடி பற்றி அவர் புகார் சொன்ன போது அதைக் கேட்டு குவாஸ்க் முறுவலித்தான்..
இப்படி ஒரு பாதுகாப்பு ஏற்பாடு உங்களுக்கும் நல்லது எங்களுக்கும் நல்லது மிஸ்டர்.
எப்படி ஒரு ஆபததான காரியம் இது என்று உங்களுக்குத் தெரியாதா என்ன? உங்களை தனியாக இருக்கவிட்டால் ஏதாவது சிக்கலில் மாட்டிக் கொண்டுவிடுவீர்கள். தப்பித் தவறி நீங்கள் போலீஸாரிடம் மாட்டினால் உங்கள் வாயை கிளறி உண்மையை கக்க வைப்பார்கள்... நீங்கள் எங்களை காட்டிக் கொடுத்து விடும் அபாயம் உண்டு அல்லவா?
ஆரம்பம் முதற்கொண்டே கொரில்லா மாதிரி முரட்டுத் தோற்றத்தோடு இருந்த டிடி என்ற நபரை ஸ்டீலுக்கு அறவே பிடிக்காமல் போனது.. எடுத்ததற்கெல்லாம் எரிந்து விழுந்து கொண்டிருந்தான். என்பதோடு ஸிமோன் என்ற இளம் பெண்ணை ஓட ஓட விரட்டிக் கொண்டிருந்தான்.. அவள் அவனுடைய வளர்ப்பு மகள் என்று ஸ்டீல் பின்னர் தெரிந்து கொண்டார்...
உதவாக்கரை! எதையும் உருப்படியாக செய்யத் தெரியாத சோம்பேறி!
விடுங்கள்... வலிக்கிறது


அவனுடைய அட்டகாசத்தை ஸ்டீலினால் சகித்துக் கொள்ள முடியவில்லை.
அந்த அப்பாவி பெண்ணை ஏன் இப்படி கொடுமைப் படுத்துகிறாய்..?
உனக்குத் தேவையில்லாத விஷயம்... வீணாக மூக்கை நுழைக்காதே... என்னை உனக்குத் தெரியாது -


ஆனால் மறு கணமே, ஆள் தெரியாமல் மோதி விட்டோம் என்று அந்த முரடன் புரிந்து கொண்டான். அவன் ஸ்டீவின் கோட்டை இறுக்கிப் பிடித்த மறுகணம் அவனுடைய தாடையில் இடியென இறங்கியது ஒரு குத்து...
கும்!
ஆ!


நிலைகுலைந்து பின்னுக்கு சரிந்து விழுந்த படி சற்று நேரம் பிணம் போல் கீழே கிடந்தான். பிறகு அவன் தன்னை சுதாரித்துக் கொண்டு எழுந்து நின்றபோது கையில் கத்தி இருந்தது... கண்களில் கொலைவெறி தாண்டவமாடியது...
சைத்தானே!


ஆனால் டிடி ஸ்டீலை நோக்கிப் பாயுமுன் குவாஸ்க்கும், கார்னியரும் அவனை தடுத்து நிறுத்தினார்கள்.
முட்டாள்தனமாக நடந்து கொள்ளாதே டிடி.. என்ன இருந்தாலும் அவர் நம்முடைய கஸ்டமர் இல்லையா?
அவனைக் கொல்லாமல் நான் ஓயமாட்டேன்.
அப்போதைக்கு டிடி அமைதியடைந்த போதிலும் பின்னர் ஸ்டீலின் ஒவ்வொரு அசைவையும் வெறுப்பை உமிழும் விழிகளால் ஊடுருவுகிற மாதிரி பார்த்துக் கொண்டிருந்தான். பின்னர், இரவில் குவாஸ்க்கிற்கு ஒரு போன் கால் வந்தது...
டைரக்டர்தான் போன் பண்ணுகிறார் என்று நினைக்கிறேன்.. உங்களுடைய பயணத்திற்கு விமானத்தை ஏற்பாடு செய்துவிட்டிருப்பார் - அதை தெரிவிக்கத்தான் இந்த அழைப்பாக இருக்கும்..
போன் பேசி முடித்துவிட்டுத் திரும்பி வந்த குவாஸ்க்கின் கண்களில் விநோதமான ஒரு தீட்சண்யம் தென்பட்டது.
நான் சொன்னமாதிரி டைரக்டர்தான் பேசினார்.. ஆனால் அவர் தெரிவித்த தகவல்தான் ரொம்ப ருசிகரமானது..


நிதானமாக ஒரு துப்பாக்கியை உருவி எடுத்து ஸ்டீலின் நெஞ்சைக் குறிவைத்து நீட்டினான் குவாஸ்க்_
இந்த ஆளின் பெயர் ப்ரெண்ட் அல்ல_ ஜான் ஸ்டீல். இவர் ஒரு ஆங்கிலேயர்.. மார்செய்ல்ஸ் போலீஸாருக்காக உளவு வேலை பார்க்கும் துப்பறிவாளர். இப்போது பொறியில் அகப்பட்ட எலி மாதிரி நம்மிடம் மாட்டிக் கொண்டிருக்கிறார்.
ஸ்டீல் அதிர்ந்து போனார்_ அவர் கொஞ்சமும் எதிர்பாராத பயங்கர நெருக்கடி-
என்னைக் காட்டிக் கொடுத்தது யாராக இருக்கும்? போலீஸாருக்கு மட்டும் தான் உண்மை தெரியும்.
கனத்த அமைதி நிலவிய ஓரிரு கணங்களுக்குப் பின் குவாஸ்க் ஸ்டீலிடம் நெருங்கி வந்தான்... அவனுடைய முகம் உணர்ச்சிகளற்று இறுகிப் போயிருந்தது.
இப்படிப்பட்ட சூழலில் நாங்கள் செய்யக்கூடியது ஒன்றே ஒன்று தான் மிஸ்டர் ஸ்டீல்.. உங்களை உயிரோடு விட்டால் எங்கள் தலைக்கு வரும் ஆபத்து. எனவே -
... மரணத்தின் நிழல் தன்மீது படிந்து வருவதை உணரமுடிந்தது அவரால். ஆனால் அந்த நெருக்கடியான வேளையில் எதிர்பாராத முனையிலிருந்து வந்தது ஒரு குறுக்கீடு....
இவனை என்னிடம் விடுங்கள்... நான் தீர்த்துக்கட்டுகிறேன்_
ம்ம்.. இதுவும் நல்ல யோசனை தான்... உனக்கு அது சந்தோஷம் தரும் எனில் நான் ஏன் மறுக்க வேண்டும்!


அனுமதி கிடைத்து விட்ட உற்சாகத்தோடு, விழிகளில் கொலைவெறி தாண்டவமாட முன்னால் வந்தான் டிடி.
நான் அவசரப்பட வேண்டியதில்லை.. நிதானமாக உன் குரல்வளையை அறுத்து பரலோகம் அனுப்பி வைக்கலாம்!


அதைத் தொடர்ந்து மின்னல் வேகத்தில் அரைவட்ட மடித்தது கத்தியைப் பற்றியிருந்த அவனுடைய கை... சரேலென பின்னுக்கு சரிந்து அதன் பாதையிலிருந்து ஏ்டீல் விலகிக் கொண்ட போதிலும் கத்தியின் கூர்முனை அவருடைய தோளை லேசாக பதம் பார்த்துவிட்டது!
தீர்த்துக்கட்டு... டிடி!
சரக்!


எக்கச் சக்கமான நெருக்கடி— கஷ்டப்பட்டு அவர் டிடியை சமாளித்து வீழ்த்திவிட்டாலும் கூட மற்றவர்கள் தயாராக நிற்கிறார்கள் - ஆயுதங்களோடு— அப்போது அவருடைய பார்வையில் விழுந்தது தாழ்வாக இருந்த ஒரு பெரிய ஜன்னல்...
எனக்கிருக்கும் ஒரே வாய்ப்பு அதுதான்— ஆனால் நான் ஓடிச் சென்று அதன் வழியாக குதிக்க முற்பட்டால் நிச்சயம் சுட்டுத் தள்ளிவிடுவார்கள்... எனவே நான் சமயோசிதமாக செயல்படவேண்டும்.
திட்டமிட்டு ஜன்னல் வரை டிடியை அசுரத்தனமாக தள்ளிக்கொண்டு போன ஸ்டீல் சட்டென்று—
...முரட்டுத்தனமாக அவனை முட்டித் தள்ளினார்... ஓசையோடு உடைந்த கண்ணாடி பொல பொல வென்று உதிர்ந்தது—
மடேர்
டிடி— விடாதே!



என்ன நடந்தது என்று குவாஸ்க் நிதானிப்பதற்குள் இருவரும் கட்டிப்பிடித்தவாறு அந்த முதல் மாடி ஜன்னல் வழியே வெளியே பாய்ந்து தரையில் விழுந்தனர்...
ஆ ஆ ஆ!
விழுந்த போது டிடி அடியில் இருந்ததால் அதிர்ச்சியில் சுயவுணர்விழந்து போனான்.
ஸ்டிலுக்கும் பபங்கர அதிர்ச்சிதான் என்ற போதிலும் காயம் ஏதுமின்றி தப்பிவிட்டார்... சட்டென்று எழுந்து அவர் இருட்டினூடே பாய்ந்தோடிய போது....
... தோட்டாக்கள் சரமாரியாக சீறிக் கொண்டு வந்தன.
தப்பியோடுகிறான்... சுட்டுத் தள்ளுங்கள்.
டுமீல்!
டுமீல்!..


அசுர வெறியோடு சுற்றுச் சுவர்மீது தாவி ஏறிய ஸ்டீல்_


மறுபக்கம் இருந்த சதுப்பு நிலப்பரப்பில் குதித்து எழுந்தோடினார்_
இருட்டு எனக்கு ஒரு வகையில் சாதகமான அம்சம்_ ஆனால் அதே சமயம் இடம் பார்த்து தடம் பதிக்க முடியாது_ தெரியாத்தனமாக புதை சேற்றில் காலை வைத்தேனோ தொலைந்தேன் அத்தோடு_


அது சேற்றுப் பகுதியாதலால் ஸ்டீல் ரொம்பவும் தான் அல்லாடிப் போனார்... தொலைவில் தெரிந்த ஒரு காரின் முகப்பு வெளிச்சம் அவருடைய மனதில் நம்பிக்கை துளிர்விடச் செய்தது...
அந்தக் காரை மட்டும் நிறுத்த முடியுமேயானால் நான் தப்பிப்பது உறுதியாகிவிடும்...
நேரத்தோடு போட்டி போட்டுக் கொண்டு தட்டுத் தடுமாறி சேற்றுப் பகுதியை கடந்து அவர் சாலையில் காலடி வைத்த போது கார் சமீபித்து விட்டது...
ப்ளீஸ்... ஸ்டாப்!
அதிர்ஷ்டவசமாக கார் கிறீச்சிட்டு அவரருகே வந்து நின்றது... காரை ஓட்டி வந்த நபர் கண்ணாடியை கீழே இறக்கிய போது உள்ளே இருந்தவரைப் பார்த்து இன்ப அதிர்ச்சிக்குள்ளானார் ஸ்டீல்...
ஜிம்மி!...
மிஸ்டர் ஸ்டீல்!


காரில் ஏறி அமர்ந்த ஸ்டீல் நடந்த சம்பவங்களை ஜிம்மியிடம் விவரித்தார்....
நான் தற்செயலாக இவ்வழியே வந்தது தெய்வாதீனமானது- லூனலில் இருக்கும் ஒரு கைதியை ஏற்றிக் கொண்டு மார்ஸெய்ல்ஸ் திரும்புவது என் நோக்கம்... ஆனால் இந்த விவகாரம் இப்போது முக்கியத்துவம் பெற்று விட்டது...
'கறுப்பு வட்டம்' பற்றிய உண்மைகளை இப்போது நாம் அறிந்து விட்டோம்.... இனி அவர்களை மடக்கிப் பிடிப்பது பற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
தன் வசம் இருந்த டிரான்ஸ்மிட்டரை எடுத்து பொருத்திக் கொண்டு மார்ஸெய்ல்ஸிலிருந்த இன்ஸ்பெக்டரோடு ஜிம்மி பேசலானான்....
நான் ஜிம்மி பேசுகிறேன் ஸார்.. தற்செயலாக மிஸ்டர் ஸ்டீலை சற்று முன் வழியில் சந்தித்தேன். மௌவின் -
ப்ளாங்க் சாலையிலுள்ள கௌலோனார் மாளிகையிலிருந்து தப்பியோடி வந்திருக்கிறார். ஆமாம்... கௌலோனார் - இவர் சொன்ன குறிப்புகளின் படி பார்த்தால் அது நிச்சயம் அந்தக் கட்டிடம் தான். கறுப்பு வட்டத்தைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் அங்கே இருக்கிறார்கள் உடனே நீங்கள் அங்கே வர முடியுமா.? நாங்கள் அவர்கள் தப்பியோடி விடாதவாறு தேக்கி நிறுத்தி வைக்க முயற்சிக்கிறோம்...
அதையடுத்து ஸ்டீலிடம் நிலவரத்தை தெளிவாக எடுத்துரைத்தான் ஜிம்மி...
நீங்கள் நிச்சயம் போலீஸிடம் போவீர்கள் என்று எதிரிகளுக்கு தெரியும். எனவே, உடனடியாக அந்த இடத்தை காலி செய்துவிட்டு ஓடிப்போக முயற்சிப்பார்கள்... நாம் இப்போதே போய் முட்டுக்கட்டை போட்டாலன்றி அவர்கள் தப்பித்து விடுவார்கள்...


இன்ஸ்பெக்டர் பரிவாரங்களுடன் அங்கே வந்து சேரும்வரை நீங்களும் நானுமாகத் தான் அந்த முயற்சியில் ஈடுபடவேண்டும்... மிக ஆபத்தான சங்கதி என்பதில் சந்தேகமே வேண்டாம்... என்ன சொல்கிறீர்கள்?
நான் ரெடி!


அதையடுத்து இருவரும் காரில் ஏறி அமர்ந்தனர். கௌலோனார் மாளிகையை நோக்கி காரை வேகமாக செலுத்திச் சென்றான் ஜிம்மி.
இந்த இடம் தான்!
ம்ம்... அனைத்து ஜன்னல்களிலும் விளக்கு வெளிச்சம் தெரிகிறது... இடத்தை காலி செய்து விட்டு ஓடிப் போகக முனைப்பாக முயற்சி நடக்கிறது போலும்.


காரை சற்றுத் தள்ளியே நிறுத்திவிட்டு இருவரும் கால்நடையாகவே கட்டிடத்தை நோக்கி முன்னேறினார்கள்...
நீங்கள் இங்கேயே இருங்கள் ஸார்.. நான் போய் அவர்களுடைய கார்களை நகர்த்த முடியாமல் பண்ணி விட்டு வந்துவிடுகிறேன்...
ஓ.கே..



ஜிம்மி கார் ஷெட்டுக்குள் ஓசைப்படாமல் நுழைவதை ஸ்டீல் பார்த்துக் கொண்டிருந்தார். சற்று நேரம் கழித்து திரும்பி வந்த ஜிம்மி தலைவாசலை நோக்கி அவரை அழைத்துப் போனான்...
நீங்கள் கதவை தட்டுங்கள்... கதவு திறந்ததும் நாம் அதிரடியாக உள்ளே பிரவேசிக்க வேண்டும்..
நான் ரெட
ஸ்டீல் கதவைத் தட்டினார்.. யாரோ நடந்து வரும் காலடியோசை கேட்டது... அதையடுத்து கதவு அகலத் திறந்தது..
நீயா!
ஸ்டீல் புயலென உள்ளே நுழைய யத்தனித்தார்... அப்போது ஒரு ஆட்டோமேடிக் துப்பாக்கியின் முனை அவருடைய பிடரியில் அழுத்துவதை உணர்ந்தார்... அதே சமயம் ஜிம்மியின் வார்த்தைகள் சாட்டையை சொடுக்குவதுபோல் வந்து விழக்கேட்டார்...
அப்படியே உறைந்து நில்லுங்கள் மிஸ்டர் ஸ்டீல்... தயவு செய்து எங்களுக்கு தொல்லை கொடுக்காதீர்கள்...
ஜிம்மி!...


அதையடுத்து ஹாலுக்குள் தள்ளிச் செல்லப்பட்ட ஸ்டீலுக்கு அந்த அதிர்ச்சியான உண்மை உறைத்தது.
டைரக்டர் ஸார்... உங்களை நாங்கள் இங்கே இவ்வளவு சீக்கிரத்தில் எதிர்பார்க்கவில்லை...
பொறுப்பில்லாத உதவாக்கரைகள்... ஸ்டீலை எப்படி தப்பவிட்டீர்கள்? அவருடைய துரதிர்ஷ்டம் என்னுடைய காரை வழிமறித்தது... அப்படி நிகழாது போயிருந்தால் அத்தோடு நம்முடைய கும்பல் ஒரேயடியாக நாசமாகிப் போயிருக்கும்.


பின்னர் மாடியிலிருந்த டைனிங் அறையில் அவரை உட்கார்த்தி வைத்து, ஏதோ விருந்துக்கு மெனு தயாரிக்கிற மாதிரி சாவகாசமாக அவரை எப்படி தீர்த்துக் கட்டலாம் என்று ஆலோசனை நடத்தினார்கள்.
இவரை சுட்டுக் கொன்றால் சடலத்தை எப்படி மறைப்பது?
அது ஒன்றும் பிரச்னையே அல்ல. வெளியே சுற்றுவட்டாரத்தில் எத்தனையோ புதை சேறு மையங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றில் தூக்கிப் போட்டால் விழுங்கி ஏப்பமிட்டு விடும்.


மரணம் ஏறத்தாழ உறுதியாகிவிட்ட பயங்கரத்தில் ஒரு வேளை நாம் தீக்கனவு கண்டு கொண்டிருக்கிறோமோ என்கிற குழப்பம் கூட ஏற்பட்டுவிட்டது அவருக்கு. போலீஸாரை விட கறுப்பு
வட்டத்தினர் படுசாமர்த்தியமாக செயல்படுவது எப்படி சாத்தியமாகி வந்தது என்கிற இரகசியம் இப்போது தெளிவாகிவிட்டது. இந்தக் கும்பலின் டைரக்டர் - ஒரு போலீஸ் உயர் அதிகாரி!
ஜிம்மி எல்லோரையும் முட்டாளாக்கி வந்திருக்கிறான்_ என்னவோ பால் சமார்ட் அவனுடைய ஆத்ம தோழன் மாதிரியும் அவனுடைய சாவு அவனை ரொம்பவும் தான் வேதனைப்படுத்தி விட்டமாதிரியும் நாடகமாடியிருக்கிறான்... பாலின் கொலைக்கு மூலகாரணமே இவன்தான். இன்ஸ்பெக்டர் டேவிட்டுக்கு டிரான்ஸ்மிட்டரில் பேசியதும் கூட நடிப்புத்தான் போலும்...


பேச்சு சுவாரஸ்யத்தில் கதவு மெதுவாக திறந்து கொண்டதையும் ஒரு இளம் பெண் அங்கே பிரசன்னமானதையும் கவனிக்கத் தவறிவிட்டது அந்தக் கும்பல்.



ஒரு சிறு ஓசை கேட்டு பின்னர் அவர்கள் திரும்பி நோக்கிய போது நடுங்கும் கரங்களால் ஒரு ஆட்டோ மேடிக் துப்பாக்கியை பிடித்தவாறு ஸிமோன் அங்கே நின்று கொண்டிருந்தாள்.
முட்டாள் பெண்ணே... துப்பாக்கியை கீழே போடு.
ஸிமோன்...! என்ன செய்கிறோம் என்று தெரிந்து தான் இதைச் செய்கிறாயா?
அவள் முகத்தில் பீதி பரவியிருந்தது... ஆனால் செயலில் ஒரு தீவிரம் இருந்தது.
அந்த இங்கிலீஷ்காரரை போக விடுங்கள்... அவரை நீங்கள் கொலை செய்வதை நான் அனுமதிக்கப் போவதில்லை.
டிடி... உன் வளர்ப்பு மகள் செய்கிற காரியத்தைப் பார்த்தாயா..? அவளை உன்னால் அடக்க முடியாதா என்ன?
அவளை இப்போது நான் என்ன செய்கிறேன் என்று பாருங்கள்... டைரக்டர் ஸார்!
ஏய்... மிருகமே... கிட்டே வராதே.. அப்பன் என்றும் பார்க்க மாட்டேன் - சுட்டு விடுவேன்.


அப்படி எச்சரித்த பின்னரும்
டிடி முன்னேறி வரவே
ஸிமோனின் நடுங்கும் விரல்
துப்பாக்கி விசையை
இழுத்தது—
அனுபவமில்லாததாலும்,
பயத்தாலும் கைகள்
நடுங்கியதால் தோட்டாக்கள்
தாறுமாறாகப் பாய்ந்தன...
ரட்-டட்-டட்-ட்டட்


டிடி தள்ளாடி விழுந்தான்...
மேலே முகட்டிலிருந்து காரை
பெயர்ந்து விழுந்தது... ஜன்னல்
கண்ணாடிகள் சிதறின...
அங்கே குழப்பம் தலை
தூக்கியது... தோட்டாவால்
தாக்குதலுக்குள்ளான குவாஸ்க்
ஜிம்மி மீது சரிந்தான்.
கையில் ஆயுதம் ஏதுமில்லாத
கார்னியர் மேஜைக்கு அடியில்
போய் ஒளிந்து கொண்டான்.


இதுதான் தருணம் என்று
பாய்ந்து ஸிமோனின்
கையிலிருந்து துப்பாக்கியைப்
பறித்துக் கொண்டு எதிரிகள்
பக்கம் திரும்பினார் ஸ்டீல்...
ஸிமோன்... ஓடிப் போய்விடு இங்கிருந்து!


துப்பாக்கி விசையை இழுத்தார் ஸ்டீல்... அந்தோ... தோட்டாக்கள் தீர்ந்து போய்விட்டிருந்தன... எரிச்சலோடு துப்பாக்கியை ஜிம்மியின் முகத்தைக் குறி வைத்து அசுரத்தனமாக எறிந்தார்...
ஸிமோனை இழுத்துக்கொண்டு படிக்கட்டை நோக்கி ஓடினார் ஸ்டீல். மார்ஸெல் குறுக்கிட்டுத் தடுக்க முயன்றான். அவனுடைய தாடையில் குத்துவிட்டு வீழ்த்தினார்...
கும்!..
உயிர் பிழைக்க இரண்டாம் முறையாக ஸ்டீல் அவ்வீட்டை விட்டு வெளியேறி ஓடினார்... இம்முறை அவரோடு ஒரு பெண் இருந்தது ஒரு இடைஞ்சல். தலை வாசலைவிட்டு வெளியேறிய போது பின்னால் துரத்திக் கொண்டு வரும் சந்தடி கேட்டது...
ஷெட்டிலிருந்து ஒரு காரை கிளப்பிக் கொண்டு போக அவகாசமில்லை. ஜிம்மி தன் காரை பூட்டி வைத்திருப்பதும் உறுதி...


விடியும் வேளை நெருங்கிக் கொண்டிருப்பதை வெளுத்துக் கொண்டு வந்த கிழக்கு வானம் உணர்த்தியது.
இதுவரை இருட்டு ஒரு போர்வையாக எங்களைக் காத்து வந்தது... வெளிச்சம் பரவி விட்டால் எதிரிகள் எங்களை பார்த்துவிடும் அபாயம் ஏற்படும்...


ஒரு ஆட்டோமேடிக் துப்பாக்கியின் முழக்கம் அவர்களுக்கு பின்னால் சற்றுத் தொலைவில் எழுந்ததை தொடர்ந்து தோட்டாக்கள் சீறிக் கொண்டு வந்தன...
அந்த ஆட்டோமேடிக் துப்பாக்கியில் யாரோ மறுபடியும் தோட்டாக்களை நிரப்பியிருக்கிறார்கள்... அது - அடிபட்டு விழுந்து கிடந்த குவாஸ்க்காகவோ, டிடியாகவோ அலலது நான் வீழ்த்திவிட்டு வந்த மார்ஸெல்லாகவோ இருக்க வாய்ப்பில்லை.. மிஞ்சியிருப்பவர்கள் ஜிம்மி, கார்னியர், ஜியார்ஜெஸ் மட்டுமே.....
க்ராக்...


அப்போது மெலிதான வெளிச்சத்தில் கீழ்த்திசை நோக்கி நீண்ட ஒரு தரைவழிப் பாலத்தில் கார் ஒன்று விரைவதை கண்ணுற்றனர்.. ஸிமோனுக்கு அந்தக் காரை அடையாளம் கண்டு கொள்வதில் சிரமம் இருக்கவில்லை.
அது - கார்னியரின் கார்!
நமமை முநதிச் சென்று. இறங்கி நம் வழியில் எதிர்ப்படடு நம்மை முன்னேற விடாமல் செய்வது அவனுடைய நோக்கமாக் இருக்கலாம். மற்ற இரண்டு நபர்களும பின்னாலிருந்து வந்து நம்மை நெருக்கலாம்!


மீண்டும் ஒரு துப்பாக்கி முழக்கம் அவர்களுக்குப் பின்னால் எழுந்தது.. அவர்களுக்கு மிக நெருக்கத்தில் ஒரு தோட்டா பறந்து சென்றது.. ஸிமோன் தன் நடுங்கும் விரல்களால் ஸ்டீலை இறுகப் பற்றிக் கொண்டாள்!...
எனக்கென்னவோ ரொம்ப பயமாக இருக்கிறது ஸார்.
ஊஹூம்.. நீ கலவரமடையத் தேவையில்லை. இந்தப் பிராந்தியம் எனக்கு அத்துபடி.. இதை எப்படிக் கடக்க வேண்டும் என்கிற யுக்தி எனக்குத் தெரியும். ஆனால் நம்மை வேட்டையாட வரும் நபர்கள் நகரத்தில் பிறந்து வளர்ந்தவர்கள்.., அவர்களுடைய முயற்சியை நிச்சயம் நம்மால் தோற்கடித்துவிட முடியும்.


அடுத்து ஒரு தோட்டா அவர்களைத் தாண்டிச் சென்றபோது ஆட்டோமேடிக் துப்பாக்கியில் ஒரு வேளையில் ஒரு தோட்டா என்கிற மாதிரி வைத்துக் கொண்டு ஜிம்மி தான் பின்னால் துரத்தி வருகிறான் என்று யூகித்தார் ஸ்டீல்.
ரைபிள் மாதிரி கச்சிதமாக இலக்கை குறி வைக்க முடியாது... ஆனால் வெளிச்சம் பரவி விட்டபடியால் அவன் எங்களை இனி தெளிவாகப் பார்க்க முடியும்.


திரள் திரளாக வந்த பனி மூட்டத்தினுள் புகுந்து ஜிம்மியின் பார்வையில் படுவதை தவிர்த்துக் கொண்டு முன்னேறினர். ஸிமோன் ஒரேயடியாக களைத்துப் போய்விட்டாள்.. அமர்ந்து ஓய்வெடுத்த வேளையில் அவளைப்பற்றி விசாரித்தார் ஸ்டீல்.
நீ எப்படி இந்தக் கூட்டத்தினுள் வந்தாய்?
டிடியின் வளர்ப்பு மகள் நான்... மாளிகையில் பணிபுரியும் பெண்ணுக்கு ஒத்தாசை செய்ய என்று என்னை டிடி இங்கே அழைத்து வந்தார்... ஆனால் அவருக்கு என் மீது கொஞ்சம் கூட பாசம் கிடையாது.. எடுபிடி மாதிரிதான் என்னை நடத்துவார்.


மீண்டும் அவர்கள் எழுந்து நடக்கத் தொடங்கிய போது மெலிதான இருமல் சப்தத்தையும் சேற்றில் கால் புதைத்து நடக்கும் போது எழும் சளக்.. புளக் சப்தத்தையும் செவிமடுத்தனர். அசைவற்று நின்று கவனித்தனர். அவர்களுக்கு முன்னால் சில கஜ தொலைவில் ஒரு மனிதன் நின்று கொண்டிருப்பது நிழலுருவமாக புலப்பட்டது.
கார்லியர்!



அவன் கையிலிருந்த ஆட்டோமேடிக் துப்பாக்கி ஸ்டீலின் ஆர்வத்தைத் தூண்டியது...
அது மட்டும் என் கைக்கு வந்துவிட்டால் அப்புறம் எதற்கும் நாங்கள் பயப்படத் தேவையில்லை. நாமும் சமபலம் படைத்தவர்களாகிவிடுவோம்.
பின்னரல் ஏதோ சந்தடி கேட்கிறது என்பதை கார்னியர் கடைசி தருணத்தில் தான் உணர்ந்தான். அது என்னவென்று தெரிந்து கொள்ள சரேலென்று அவன் திரும்பிய வேளையில் ஸ்டீலின் எஃகை நிகர்த்த கரம் கத்தி போல் அவனுடைய பிடரிய்யை வெட்டியது.
மடேர்!
கார்னியர் வெட்டுண்ட மரம் போல் சரிந்தான். அவன் கையிலிருந்த துப்பாக்கி அந்த மேட்டுப் பகுதியினை ஒட்டியிருந்த குட்டையினுள் போய் விழுந்தது. அதை எடுக்க ஸ்டீல் ஆன மட்டும் கைகளால் துளாவிப் பார்த்தார் போனது போனது தான்...
பிரயோஜனமில்லை... இம்மாதிரியான நீர்த்திட்டுகள் அடித்தளமே கிடையாதோ என்கிற மாதிரி பயங்கர ஆழத்தோடு இருப்பதுண்டு...



மயங்கி வீழ்ந்து கிடந்த கார்னியரை அப்படியே விட்டு விட்டு கலைந்து கொண்டு வந்த பனிமூட்டத்தினூடே முடிந்தவரை வேகமாக முன்னேறினார்கள் அவ்விருவரும்...
டுமீல்! டுமீல்!
ஊஹும்... அந்த தோட்டா நம்மை தீண்டாதது தெய்வாதீனமானது!
அருகாமையிலிருந்த ஒரு அடர்ந்த புதர் பகுதிக்குள்ளிருந்து ஒரு குதிரை உரத்துக் கனைத்ததைத் தொடர்ந்து துப்பாக்கி முழக்கம் கேட்டுக் கலவரமடைந்த குதிரைகள் வெளியேறி வேகமாக ஓடத் தொடங்கின.
ஸிமோன் முற்றிலுமாக களைத்துப் போய்விட்டாள். ஜிம்மிக்கும் அவர்களுக்குமிடையே இருந்த இடைவெளி வேகமாக குறைந்து வந்தது. அவர்களுக்கு எதிரே ஒரே ஒரு குறுகலான நிலப்பரப்பை தவிர பரந்து விரிந்து கிடந்த நீர்ப்பரப்புத்தான் கண்ணில் பட்டது— தண்ணீரில் இறங்கி விரைய முற்பட்ட ஸ்டீவை இழுத்துப் பிடித்து நிறுத்தினாள் ஸிமோன்.
ஸார்... சேற்றில் மாட்டிக் கொண்டு விடப் போகிறோம் வாருங்கள்... அந்த நிலப்பரப்பு வழியாகப் போவோம்
நோ.... நாம் குதிரைகள் போன வழியிலேயே போவோம். அந்த நிலப்பரப்பு உறுதியானது எனில் அந்த வழியை அவை தேர்ந்தெடுத்திருக்கும்.


ஆனால் அந்த சதுப்பு நிலப்பரப்பின் துஷ்டத்தனம் பற்றி சிறிதும் தெரியாது ஜிம்மிக்கு. அந்த நிலப்பரப்பு வழியாகப் போனால் வேகமாக முன்னேறி தண்ணீருக்குள் நடந்து வருபவர்களை சுலபமாக மடக்கி விடலாம் என்று கணக்குப் போட்டான் அவன்.
அறிவு கெட்ட முட்டாள்கள்! இம்முறை சுடும் வரம்பிற்குள் சுலபமாக நெருங்கி விட முடியும். என் குறி தப்பாது!


தங்கள் காலடியில் தரை உறுதியாக இருப்பதை உணர்ந்த ஸ்டீலும், ஸிமோனும் நிம்மதிப் பெருமூச்சு விட்ட வேளையில் தங்களுக்குப் பின்னால் பயங்கர அலறல் சப்தம் எழும்புவதைக் கேட்டு திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தனர்....
ஜிம்மி ஆபத்தில் மாட்டிக் கொண்டு விட்டான்...
ஆஆஆஆ!


அந்த மேட்டுப் பகுதி உண்மையில் புதை சேற்றில் மீதிருந்த ஒரு உலர்ந்த திட்டு. அந்த உண்மை தெரியாமல் அவ்வழியாக ஓடி வந்த ஜிம்மி புதை சேற்றில் சிக்கிக் கொண்டு விட்டான்...
ஐயோ... மாட்டிக் கொண்டு விட்டேன்.
வெளியேற அவன் செய்த பிரயத்தனங்கள் அவன் மேலும் மேலும் புதையுண்டு போகவே வழி வகுத்தன. இடுப்பளவு புதையுண்டு விட்ட நிலையில் மரண பீதி அவனைக் கவ்வியது.
காப்பாற்றுங்கள்.... காப்பாற்றுங்கள்
கைவசம் உறுதியான கயிறு இல்லாத நிலையில் ஸ்டீல் நினைத்தாலும் ஜிம்மியைக் காப்பாற்றுவது என்பது நடவாத காரியம்... பசுத்தோல் போர்த்திய புலியாக வலம் வந்த அந்த மதியூகமிக்க சமூக விரோதி, ஈவிரக்கமற்ற கொலைகாரன் செத்தொழிந்தான்...
அவன் கெட்டவன் தான் என்ற போதிலும் இது ரொம்ப கொடுமையான சாவு...
நான் அவனை அடியோடு வெறுத்தாலும் அந்தக் காட்சியை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை.



எஞ்சியிருந்த மூன்றாவது நபரான ஜியார்ஜெஸ் கண்ணுக்கெட்டிய மட்டிலும் தென்படவில்லையாதலால் அவனைப்பற்றி அக்கறைப்படாமல், அவ்விருவரும் குதிரைகள் தேர்ந்தெடுத்துப் போன அதே பாதையில் தொடர்ந்து நடந்து முடிவில் ஒரு சாலையை வந்தடைந்தனர்.
ஜியார்ஜெஸ் பற்றி இனி நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை... பயல் இனி நம்மைப் பின்பற்றி வந்து சேர வாய்ப்பேயில்லை.




கொஞ்ச தூரம் அவர்கள் நடந்த பின் அவ்வழியாக ஒரு வேனில் வந்த விவசாயி அவர்களை ஏற்றிக் கொண்டு வந்து மார்செய்ல்ஸில் இறக்கி விட்டான். நேராக போலீஸ் தலைமையகத்திற்கு விரைந்த
அவர்கள் இன்ஸ்பெக்டரைச் சந்தித்தார்கள்.. நடந்தவைகளை ஸ்டீல் விளக்கமாக எடுத்துரைத்தார்... அதைக்கேட்ட இன்ஸ்பெக்டருக்கு வியப்பு, திகைப்பு...!
எத்தனையோ நல்ல நடிகர்களை நான் பார்த்திருக்கிறேன்... ஆனால் ஜிம்மி என்னையே முட்டாளாக்கி விட்டான்! ஆஸ்கார் அவார்டு கொடுத்தாலும் தகும்! அவன் சேற்றில் மூழ்கி செத்தது பரிதாபமானது. அதைவிட அவனை சிரச்சேதம்
செய்திருந்தால் தான் சரியான தண்டனையாக இருந்திருக்கும். மேடம் க்ளெருக்கும் நைட்-க்ளப்பின் உரிமையாளர் டௌமியருக்கும் இதில் பங்குண்டு... அவர்களையும் கைது செய்ய வேண்டும்... சம்பந்தப்பட்ட அனைவரையும் சட்டத்தின் பிடியில் கொண்டு வர உடனே ஏற்பாடு செய்கிறேன்.


அங்கே நடந்த உரையாடல்களை கேட்டுக் கொண்டு நின்றிருந்த அலெக்ஸின் முகத்தில் கேலிப் புன்னகை ஒன்று இழையோடியது...
ஜிம்மியை ரொம்பவும் தான் நம்புகிறீர்கள் - இடம் கொடுக்கிறீர்கள் என்று நான் சொல்லி வந்திருக்கிறேன்... எனக்கும் முக்கிய வழக்குகளில் நீங்கள் பங்கு கொடுத்து வந்திருக்க வேண்டும் ஸார்!
உன் பேச்சில் நியாயமிருக்கிறது அலெக்ஸ்... ஜியார்ஜெஸையும், கும்பலின் பிற உறுப்பினர்களையும்
தேடிப்பிடித்து கைது செய்யும் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன்...! இப்போது திருப்திதானே?
கறுப்பு வட்டம் முற்றிலுமாக வேரறுக்கப் பட்டுவிட்டதாக எடுத்துக் கொண்டு விடலாம்... இப்படியொரு அற்புதமான சாதனை நிகழ்த்திய உங்களை எப்படி பாராட்டுவது... நன்றி கூறுவது என்று எனக்குத் தெரியவில்லை மிஸ்டர் ஸ்டீல்... அடுத்த விமானத்தைப் பிடித்து ஊருக்குத் திரும்பப் போகிறீர்கள் அப்படித்தானே?
யெஸ் இன்ஸ்பெக்டர்... நீங்கள் எனக்காக செய்யக் கூடிய பிரதியுபகாரம் ஒன்று இருக்கிறது...
இவளை நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். இவள் மீது எந்தப் பழியும் வந்து விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்... இவள் மட்டும் தக்க தருணத்தில் குறுக்கிட்டிராவிடில் நான் பரலோகம் போய்ச் சேர்ந்திருப்பேன். கறுப்பு வட்டம் தொடர்ந்து செழித்து வளர்ந்து கொண்டிருக்கும்...
கவலைப்படாமல் போங்கள்... இவளை பத்திரமாக பார்த்துக் கொள்வது என் பொறுப்பு.
முற்றும்

# Visit on website




www.lmcomics.weebly.com